NDB
கிரடிட் கார்ட்ஸ்

கடனட்டை உரிமையாளருக்கான ஒப்பந்த விதிகளும் நிபந்தனைகளும்

பெறுமதிமிக்க வாடிக்கையாளருக்கு,

உங்களுக்கு NDB வங்கிக் கடனட்டை ஒன்றை வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகிறோம்.

வங்கியின் கடனட்டையானது நவீன சிப் தொழில்நுட்பத்தைக் கொண்டிருப்பதால் மோசடிகளைத் தவிர்த்து, நீங்கள் எந்த ஒரு இடத்திற்கும் சென்றாலும் உங்களுக்கு அதிபாதுகாப்பு வழங்குகின்றது. எமது கடனட்டையை உலகின் எந்த ஒரு இடத்திலும் உள்ள 25 மில்லியனுக்கும் மேற்பட்ட வியாபார நிலையங்களிலும் 1 மில்லியனுக்கும் மேற்பட்ட VISA ATM களிலும் பயன்படுத்த முடியும்.

இக்கடனட்டையை சிறந்த முறையில் பயன்படுத்துவீர்கள் என நாம் நம்புகிறோம்.

உண்மையுள்ள

கிஹான் டயஸ்
உதவி உப தலைவர்
கார்ட் மற்றும் ஏனைய விநியோகம்

பொது அறிவுறுத்தல்கள்

அட்டைப் பாதுகாப்பு - உங்களது அட்டை தொலைந்தோ அல்லது களவாடப்பட்டோ காணப்பட்டால், உடனடியாக +94 11 2 448 888 அல்லது +94 772 4448 888 என்ற இலக்கத்தில் எமது 24 மணி நேர சேவை நிலையத்தை தொடர்பு கொள்ளுங்கள். அத்துடன் எழுத்து வடிவிலும் எமக்கு அறிவியுங்கள். உங்கள் PIN இலக்கத்தை அட்டையுடன் வைத்திருக்கவோ அல்லது வெளிநபருக்கு தெரிவிக்க வேண்டாம்.

கடன் வரையறை - வழங்கப்பட்டுள்ள கடன் வரையறையைப் பார்க்கிலும் செலுத்தவேண்டிய தொகை அதிகமாகக் காணப்படும் போது அதற்கு மேலதிக வட்டி அறவிடப்படும். உங்கள் கடன் வரையறையைத் தாண்டும்பொழுது உங்கள் கொடுக்கல் வாங்கல்கள் நிராகரிக்கப்படும். உயர் கடன் வரையறைக்கான விண்ணப்பங்கள் அட்டை நிலைய முகாமையாளருக்கு எழுத்து வடிவில் தெரிவிக்கப்படல் வேண்டும்.

அட்டையிலிருந்து முற்பணம் பெறல் - உங்களுக்கு வழங்கப்பட்டுள்ள கடன் வரையறைத் தொகையிலிருந்து 35% வரை முற்பணத்தை உங்கள் அட்டை மற்றும் PIN இலக்கத்தைப் பயன்படுத்தி எந்தவொரு VISA ATM மூலமும் பெற்றுக்கொள்ள முடியும்.

தொலைந்த அல்லது மாற்றீடு செய்யப்படவேண்டிய அட்டை - சேதமுற்ற உங்கள் அட்டைக்கு பதிலாக புதியதோர் அட்டையைப் பெற்றுக்கொள்ள வேண்டுமாயின், +94 11 2 305 031 என்ற எமது அழைப்பு நிலையத்திற்கு கோரிக்கை ஒன்றை முன் வைக்கலாம். இல்லாவிடின் +94 11 2 448 888 என்ற இலக்கத்தில் எமது அழைப்பு நிலையத்திற்கு இது பற்றி அறவித்து, உங்கள் அட்டையை இணைத்து கடிதம் ஒன்றையும் அனுப்பி வைத்தல் வேண்டும்.

ஏனைய சேவைகள் - பின்வரும் மேலதிக சேவைகளும் உங்கள் கடனட்டைக்கு உண்டு:-

- உங்கள் கொடுக்கல் வாங்கல்கள் பற்றி இலவச SMS தகவல்கள் உங்கள் கையடக்கத் தொலைபேசிக்கு அனுப்பப்படும்.
- உங்கள் சேமிப்பு அல்லது நடைமுறைக் கணக்கைப் பயன்படுத்தி, உங்கள் அட்டை தொடர்பாக செலுத்தவேண்டிய தொகையை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ செலுத்த நிலையான கட்டளை வசதியைப் பயன்படுத்தலாம்.

நினைவில் வைத்திருக்க வேண்டியவை

- உங்கள் அட்டையில் கையொப்பம் இட்ட பின்னர், அட்டையின் முற்புறம் மற்றும் பிற்புறத்தின் பிரதி ஒன்றை உங்கள் வசம் வைத்திருத்தல் நல்லது.
- புதிய அல்லது மீள்புதுப்பிக்கப்பட்ட அட்டையாக இருப்பின் அதற்குரிய புதிய PIN இலக்கத்தைப் பெற்றுக்கொள்ளும் வரை, அட்டையிலிருந்து முற்பணங்களை எடுக்க வேண்டாம். உங்கள் கோரிக்கைக்கேற்ப வழங்கப்பட்ட அட்டையில் பொறிக்கப்பட்டுள்ள அட்டை செல்லுபடியாகும் காலத்தை குறித்துவைத்துக் கொள்ளவும். அத்துடன் காலவதியாகிய அட்டைகளை உடைத்து அழிக்கவும்.
- உங்கள் அட்டையைப் பயன்படுத்தும்பொழுது, அதன் கொடுக்கல் வாங்கல்கள் பற்றிய பற்றுச்சீட்டுக்களை கவனமாக வைத்திருங்கள். உங்கள் மாதாந்த அறிக்கைகளை பெற்றுக்கொள்ளும் பொழுது, அவற்றுடன் ஒப்பிட்டுப் பார்க்க முடியும்.

- உங்கள் அட்டை தொலைந்தோ அல்லது களவாடப்பட்டோ காணப்பட்டால், உடனடியாக +94 11 2 448 888 என்ற இலக்கத்திற்கு அழைப்பை ஏற்படுத்தி அதைப் பற்றி அறிவியுங்கள்.

  *உங்கள் PIN இலக்கம் - PIN இலக்கத்தை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள். PIN இலக்கம் அனுப்பப்பட்ட கடிதத்தை அப்புறப்படுத்துங்கள்.
- பாதுகாப்பிற்காக உங்கள் PIN இலக்கத்தை உங்கள் அட்டையிலோ அல்லது உங்கள் பணப்பையில் உள்ள ஏதாவது ஒன்றிலோ அல்லது உங்கள் அட்டையுடன் காணப்படும் ஏதாவது ஒன்றிலோ எழுதி வைக்க வேண்டாம்.
- பாதுகாப்பு கருதி வங்கியானது, உங்கள் கடனட்டையின் குறிப்பிட்ட சில கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக தகவல்களை கேட்டு அறிந்துகொள்ள உங்களை தொடர்பு கொள்ளும். அவ்வேளையில் பின்வருவன தொடர்பாக உங்கள் ஒத்துழைப்பை வங்கிக்கு வழங்குங்கள்:-
  - உங்கள் புதிய முகவரி மற்றும் கையடக்கத்தொலைபேசி இலக்கங்கள் பற்றி எமக்கு அறிவியுங்கள். உங்களுடன் உடனடியாக தொடர்பினை ஏற்படுத்த அது உதவியாக இருக்கும்.
  - முன்னரே உங்கள் வெளிநாட்டு பயணங்கள் பற்றி, +94 11 2 448 888 என்ற இலக்கத்தில் எமது 24 மணி நேர சேவை நிலையத்திற்கு அறிவியுங்கள்.
- கட்டணம் செலுத்தும் முறைகள்
  - நிலையான கட்டளை - ஆகக்குறைந்த தொகையை அல்லது முழுத்தொகையை உங்கள் NDB வங்கிக் கணக்கினூடாக நிலையான கட்டளை ஒன்றை வழங்குவதன் மூலம் செலுத்தலாம்.
  - எமது கிளைகள் மூலம் பணம் செலுத்தலாம்.

சேவைகள்	**கிளைகள்**	**வங்கிச் சேவை மணித்தியாலங்கள்**
NDB வங்கிக் கிளைகள்	எல்லா கிளைகள்	மு.ப. 9.00 - பி.ப. 3.00
சனிக்கிழமை வங்கிச் சேவை	நுகேகொடை, பெலவத்தை, மொரட்டுவை, பிலியந்தல, யாழ்ப்பாணம்	மு.ப. 9.00 - பி.ப. 1.00
365 நாட்களும் வங்கிச் சேவை	ராஜகிரிய, கல்கிஸ்ஸ	மு.ப. 9.00 - பி.ப. 8.00
365 நாட்களும் வங்கிச் சேவை	ஹெவ்லொக் டவுண்	மு.ப. 9.00 - பி.ப. 6.00

NDB வங்கி
கடனட்டை சேவைகள்
103 A, தர்மபால மாவத்தை, கொழும்பு 07.
தொ: +94 11 2 448 888, +94 772 4448 888
∴பெக்ஸ்: +94 11 2 305 031

NDB வங்கியின் கடனட்டையைப் பெற்றதும் நீங்கள் செய்ய வேண்டியவை

1. அதில் உங்கள் பெயர் சரியாக இருக்கின்றதா எனப் பாருங்கள்.

2. புதிய அட்டையில் கையொப்பமிடும் முன் NDB வங்கி அட்டை உரிமையாளருக்கான உடன்படிக்கையை வாசியுங்கள். இத்தோடு இணைக்கப்பட்டுள்ள அட்டையில் கையொப்பம் இடுவதன் மூலம் அட்டை உரிமையாளருக்கான உடன்படிக்கையில் உள்ள சட்ட திட்டங்களுக்கு நீங்கள் முழுமையாக உடன்படுவதாக கொள்ளப்படும்.

3. உங்கள் NDB கடனட்டை தொலைந்து போனால் அல்லது திருட்டுப் போனால் உடனடியாக NDB கடனட்டை நிலையத்திற்கு அறிவியுங்கள்.
   தொலைபேசி (+94) 11 2452602/3 (24 மணி நேரமும்) ∴பெக்ஸ் (+94) 11 2445847
   அல்லது அருகிலுள்ள NDB வங்கிக் கிளைக்குச் சென்று அட்டை தொலைந்த விடயத்தை எழுத்து மூலம் NDB அட்டை நிலையத்திற்கு உறுதிப்படுத்துங்கள்.



NDB கடனட்டையைப் பெற்றதும் நீங்கள் செய்ய வேண்டியவை

1. இது 16 இலக்கங்கள் கொண்ட அட்டை எண் ஆகும். வங்கியுடன் சகல தொடர்புகளின்போதும் இவ்வெண்ணைக் குறிப்பிடலாம்.
2. அட்டையில் குறிப்பிட்ட மாதத்திலிருந்து நீங்கள் அங்கத்தவராவீர்.
3. அட்டையில் குறிக்கப்பட்ட மாதத்தில் இறுதி நாள் வரை அட்டை செல்லுபடியாகும்.
4. **வீசா சின்னமும், ஒளிப்படமும்** மேற்படி சின்னம் பொறிக்கப்பட்ட எந்தவொரு வியாபார நிலையத்திலும் அல்லது பண இயந்திரத்தில் உங்கள் அட்டை ஏற்றுக்கொள்ளப்படும்.
5. **தொடர்பு இலக்கம்** - இந்த அட்டை தொடர்பான தகவல்களுக்கு இந்த இலக்கத்துடன் 24 மணிநேரமும் தொடர்புகொள்ள முடியும்.
6. **காந்தப்பட்டி** - உங்கள் அட்டை தொடர்பான முக்கிய தகவல்கள் இதில் பதியப்பட்டுள்ளது. எனவே அட்டை, எதனுடனும் உரசாமலும் காந்தத்துடன் அல்லது காந்தப்புலங்களுடன் தொடர்புறாமலும் தவிர்க்கவும்.
7. **கையொப்பப் பகுதி** - அட்டையைப் பெற்றுக்கொண்டவுடன் அழிக்க முடியாத குமிழ்முனைப் பேனாவால் உடனேயே கையொப்பமிடவும். அக்கையொப்பத்தை ஒத்ததாக நீங்கள் வியாபார நிலையப் பற்றுச்சீட்டுக்களில் இடும் கையொப்பமும் அமைய வேண்டும்.
8. **CVV2** 3 இலக்க அட்டை செவ்வை பார்க்கும் பெறுமானம்.
9. வங்கித் தொடர்பு விபரங்கள்.

அட்டை உரிமையாளருக்கான உடன்படிக்கை
நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகள்

முக்கியம்: PQ 27ஆம் பதிவிலக்கம் கொண்ட நெஷனல் டெவலொப்மன்ட் பேங்க் பிஎல்சீயால் அனுப்பப்படும் அட்டையில் கையொப்பமிடுவதற்கு முன்னர் அல்லது அதனைப் பயன்படுத்துவதற்கு முன்னர் தயவுசெய்து அட்டை உரிமையாளருக்கான உடன்படிக்கையை கவனமாக வாசிக்கவும். அட்டையை ஏற்றுக்கொள்வதன் மூலம் அத்துடன்/அல்லது அதில் கையொப்பிமிடுவதன் மூலம் அத்துடன்/அல்லது அட்டையைப் பயன்படுத்துவதன் மூலம் கீழே தரப்பட்டுள்ள நியதி நிபந்தனைகளை நீங்கள் ஏற்றுக்கொள்கின்றீர்கள். அத்துடன் அவற்றால் பிணிக்கவும் படுகின்றீர்கள்.

1. வரைவிலக்கணங்கள்

1.1 **'ATM'** என்பது வங்கிக்குக் சொந்தமானதாயினும் சரி அல்லது வங்கியால் காலத்துக்குக் காலம் நியமிக்கப்பட்ட வேறு ஏதேனும் வங்கிக்கு (வங்கிகளுக்கு) அல்லது நிதி நிறுவனத்திற்கு (நிறுவனங்களுக்குச்) சொந்தமானதாயினும் சரி அட்டைகளை ஏற்றுக்கொள்ளும் தன்னியக்க காசுப் பொறி (Automated Teller Machine) அல்லது ஏதாவது அட்டைகளை இயக்கும் பொறி அல்லது கருவி என்று பொருள்படும்.

1.2 **'விண்ணப்பதாரர்'** என்பது அட்டை விண்ணப்பத்தில் கைச்சாத்திட்டுள்ள எவரேனும் ஆள் எனப் பொருள்படும்.

1.3 **'வங்கி'** என்பது **நெஷனல் டெவலொப்மன்ட் பேங்க் பிஎல்சீ** எனவும் அதன் பின்னுறுபவர்கள், சாட்டுதல் பெறுநர்கள் எனவும் பொருள்படும்.

1.4 **'அட்டை'** என்பது, அட்டை வைத்திருப்பவருக்கு வங்கியால் வழங்கப்படும் ஒரு கொடுப்பனவு அட்டை எனப்படுவதுடன் முதன்மை, குறை நிரப்பு மற்றும் மாற்றீட்டு அட்டை(கள்) என்பவற்றையும் உள்ளடக்கும்.

1.5 **'அட்டைக் கணக்கு'** என்பது, அட்டைக் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பில் வங்கியால் பேணப்படும் ஒரு கணக்கு எனப் பொருள்படும்.

1.6 **“அட்டை நிலையம்”** என்பது NDB வங்கி கடன் அட்டை நிலையம் எனப் பொருள்படும்.

1.7 “**அட்டை வைத்திருப்பவர்**” என்பது, கடன் அட்டை கணக்கு எந்த ஆளின் பெயரில் இருக்கின்றதோ, அத்துடன் எந்த ஆளுக்கு வங்கி கடனட்டையொன்றை வழங்கியுள்ளதோ அத்துடன் எந்த ஆள் அட்டைக் கணக்கின் மீது எல்லா கொடுக்கல் வாங்கல்களுக்கும் பொறுப்புகளுக்கும் பொறுப்பாயிருக்கின்றாரோ அந்த ஆள் எனப்பொருள்படும். இது முதனிலை மற்றும் குறைநிரப்பு அட்டை வைத்திருப்பவர்களையும் உள்ளடக்கும்.

1.8 “**அட்டை கொடுக்கல் வாங்கல்**” என்பது, அட்டையை, அல்லது அட்டைக் கணக்கையும் இலக்கத்தையும் அல்லது PIN இலக்கத்தைப் பயன்படுத்தி அல்லது வேறு ஏதேனும் முறையில் மேற்கொள்ளப்படும் கொடுக்கல் வாங்கல் எனப் பொருள்படுவதுடன் அஞ்சல், தொலைபேசிக் கட்டளைகள், அழைப்பு வங்கித் தொழில்முறை, ஈ-வொலட், இன்டர்நெட், மொபைல் கொமர்ஸ், அதிகாரமளிக்கப்பட்ட அந்த சேவைகள் அல்லது/திட்டங்கள் தொடர்பான நிபந்தனைகளில் விவரிக்கப்பட்டவாறும் விளங்கப்படுத்தப்பட்டவாறும் ஒதுக்கங்கள் அட்டை வைத்திருப்பவரின் அறிவுக்கு எட்டியதாகவாயினும் சரி அல்லாவிடினும் சரி அவருடைய அதிகாரத்துடனாயினும் சரி அல்லாவிடினும் சரி (எவையேனும் பண்டங்களுக்கு சேவைகளுக்கு அத்துடன்/அல்லது நன்மைகளுக்கு ஏதேனும் தரும் நோக்கத்திற்கான கொடுப்பனவுக்கு அல்லது ஏதேனும் பண முற்கொடுப்பனவுக்கான கொடுப்பனவு உட்பட) என்பன உட்பட ஆனால் அவற்றிற்கு வரையறுக்கப்படாமல் வேறு வழிமுறைகள் ஊடாக வேறு ஏதேனும் முறையில் மேற்கொள்ளப்படும் கொடுக்கல் வாங்கல் எனப்பொருள்படும்.

1.9 “**முற்பணம் பெறுதல்**” என்பது அட்டை வைத்திருப்பவரால் அதிகாரமளிக்கப்பட்ட அட்டையை, அட்டை இலக்கத்தை அல்லது PIN இலக்கத்தைப் பாவித்து வங்கியிடமிருந்து அல்லது வேறு ஏதேனும் வங்கியிடமிருந்து அல்லது நிதி நிறுவனமிடமிருந்து அட்டை வைத்திருப்பவருக்கு பற்று வைக்கப்படுவதற்கென பணம் பெற்றுக்கொள்ளும் ஒரு செயல் எனப் பொருள்படும்.

1.10 “**அறவீடுகள்**” என்பது அட்டையை அல்லது அட்டை இலக்கத்தை அல்லது PIN இலக்கத்தைப் பாவிப்பதன் மூலம் அல்லது இந்த நியதி நிபந்தனைகளின் கீழ் எழுவதும் அட்டை வைத்திருப்பவரால் செலுத்தப்படவேண்டியவையும் அட்டைக் கணக்கிற்கு பற்றுவைக்கப்படுவனவும் நடைமுறை மீதியின் ஒரு பாகமாக அமைவனவுமான தொகைகள் எனப் பொருள்படுவதுடன் எல்லா அட்டைக் கொடுக்கல் வாங்கல்களையும் கட்டணங்கள், நிதிக் கட்டணங்கள், வட்டி, வரிகள், தீர்வைகள், மேலதிகச் செலவுகள், இழப்பீடுகள், சட்டச் செலவுகள் மற்றும் செலவீடுகள் என்பனவற்றையும் உள்ளடக்கும் ஆனால் அவற்றிற்கு மட்டுப்படுத்தப்படமாட்டாது.

1.11 "**கூட்டிணைப்பு அட்டை**" என்பது தகுதிவாய்ந்த கூட்டிணைக்கப்பட்ட குழுமம் ஒன்றின் அதிகாரமளிக்கப்பட்ட பணியாள் தொகுதிக்கு, நிறைவேற்று அலுவலர்களுக்கு, பணிப்பாளர்களுக்கு அல்லது அத்தகைய வேறு எவரேனும் ஆட்களுக்கு வழங்கப்படும் கடன் அட்டை(கள்) எனப்பொருள்படும்.

1.12 "**கடன் வரையறை**" என்பது முதனிலை மற்றும் குறைநிரப்பு கடன் அட்டை(கள்) (எவையுமிருப்பின்) கணக்குகள்மீது வங்கியால் அனுமதிக்கப்படுவதும் காலத்திற்குக்காலம் முதனிலை கணக்கு வைத்திருப்பவர்களுக்கு வங்கியால் அறிவிக்கப்படுவதுமான அதிகபட்ச பற்று மீதி எனப் பொருள்படும்.

1.13 "**நடைமுறை மீதி**" என்பது வங்கியின் பதிவேடுகளுக்கிணங்க வங்கிக்குச் செலுத்தப்படவேண்டியதும் கணக்குக் கூற்று வழங்கப்படும் தேதியன்று வங்கியின் கடன் அட்டைக் கணக்கில் நிலுவையாகவுள்ளதுமான (அட்டைக் கணக்கில் பற்று வைக்கப்படும் அனைத்து கட்டணங்களும் உட்பட) மொத்தக் கடன் மீதி எனப்பொருள்படும்.

1.14 "**வைப்பீடு**" என்பது கடன் அட்டை வைத்திருப்பவரின் கடப்பாட்டை நிறைவேற்றுவதற்காக அத்துடன்/அல்லது கடன் அட்டைகளை வழங்கும் நோக்கத்திற்காக ஒரு பிணைப் பொறுப்பாக வங்கியில் ரொக்கமாக வைப்பீடு செய்யப்படும் தொகை எனப் பொருள்படும்.

1.15 "**குழு அங்கத்தவர்**" என்பது வங்கியுடைய உப அல்லது ஒன்றிணைந்த கம்பனி எனப்பொருள்படும்.

1.16 "**உத்தரவாதம்**" என்பது, எதுவுமிருப்பின், கடன் அட்டை வைத்திருப்பவரின் கடப்பாட்டை நிறைவேற்றுவதற்காக அத்துடன்/அல்லது கடன் அட்டைகளை வழங்கும் நோக்கத்திற்காக ஒரு பிணைப்பொறுப்பாக வைக்கப்படவேண்டுமென வங்கியால் குறித்துரைக்கப்பட்ட தொகைக்காக வங்கிக்குச் சாதகமாக வங்கியால் ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய வடிவத்திலும் பொருளளவிலும் ஏதாவது ஒரு வங்கியிடமிருந்து, கூட்டிணைக்கப்பட்ட குழுமத்திடமிருந்து, நிறுவனத்திடமிருந்து, தனியாளிடமிருந்து அல்லது வங்கியால் ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய ஏதேனும் நிதி நிறுவனத்திடமிருந்து வழங்கப்படும் ஒரு உத்தரவாதம் எனப் பொருள்படும்.

1.17 "**இம்பிரின்டர்**" என்பது, கடன் அட்டைக் கொடுக்கல் வாங்கல்களை கையினால் செயல்முறைப்படுத்தும் கருவி எனப் பொருள்படும்.

1.18 "**ஊடாடு குரல் துலங்கல்**" (Interactive Voice Responsive) என்பது, கடன் அட்டை வைத்திருப்பவர் அட்டை மூலம் குறித்த சில கொடுக்கல் வாங்கல்களைச் செய்வதற்காக இலத்திரனியல் அணுக்கத்தை வழங்கும் ஒரு உபகரணம் எனப் பொருள்படுவதுடன் கடன் அட்டைக் கணக்கு மற்றும் சேவையின் பயன்பாடு தொடர்பான விசாரணைகளையும் உள்ளடக்கும் ஆனால் அவற்றிற்கு மட்டுப்படுத்தப்படமாட்டாது.

1.19 "**வணிகர்**" என்பது, அட்டை வைத்திருப்பவரால் கொடுப்பனவு முறையொன்றாக அட்டையை ஏற்றுக்கொள்வதன் மீது பொருட்களை அத்துடன்/அல்லது சேவைகளை வழங்குவதற்கு ஏதாவது வங்கியால் ஏற்றங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் கூட்டிணைக்கப்பட்ட அமைப்பு, நிறுவனம், ஆள் அல்லது வேறு தாபனம் எனப் பொருள்படும்.

1.20 "**வருமதியான குறைந்தபட்ச தொகை**" என்பது கொடுப்பனவு வருமதியாகும் திகதியன்று செலுத்தப்படின் பிந்திய கொடுப்பனவுக் கட்டணங்களை தவிர்த்துக்கொள்வதற்கென குறைந்த பட்சத்தொகை மற்றும் வரம்பு கடந்த தொகை (ஏதாவது இருப்பின்) என்பவற்றுக்கு அமைய நடைமுறை நிலுவையின் வீதம் (%) எனப்பொருள்படும். செலுத்தப்படாத ஏதேனும் நிலுவைத் தொகை வருமதியான குறைந்தபட்சத் தொகையில் உள்ளடக்கப்படும்.

1.21 "**மாதம்**" என்பது ஒரு பஞ்சாங்க மாதம் எனப் பொருள்படும்.

1.22 "**நிலுவைத் தொகை**" என்பது (எதுவுமிருப்பின்), அட்டை வைத்திருப்பவரின் முந்திய கணக்குக் கூற்றிலுள்ள நிலுவைத்தொகை எனப் பொருள்படும். கணக்குக் கூற்றில் காட்டப்படும் நிலுவைத் தொகை குறைந்தபட்ச நிலுவைத் தொகையில் உள்ளடக்கப்பட்டிருப்பதுடன் உடனடியாக செலுத்தப்படல் வேண்டும்.

1.23 "**வரம்பு கடந்த தொகை**" என்பது, அனுமதிக்கப்பட்ட கடன் வரையறையை விஞ்சிய நடைமுறை நிலுவை எனப் பொருள்படும்.

1.24 "**வரம்பு கடந்த அறவீடு**" என்பது, அட்டை வைத்திருப்பவர் அனுமதிக்கப்பட்ட கடன் வரையறையை விஞ்சுவாராயின் அவரது கணக்குக் கூற்றில் ஒருமுறை விதிக்கப்படும் அறவீடு எனப் பொருள்படும்.

1.25 "**கொடுப்பனவு வருமதியாகும் திகதி**" என்பது, நடைமுறை நிலுவைக் கொடுப்பனவு அல்லது அதன் ஒரு பகுதி அல்லது வருமதியான குறைந்தபட்ச நிலுவைத் தொகை எந்தத் திகதியளவில் செலுத்தப்படவேண்டுமென கணக்குக் கூற்றில் குறித்துரைக்கப்படுகின்றதோ அந்தத் திகதி எனப்பொருள்படும். அத்தகைய கொடுப்பனவு திகதி வங்கி விடுமுறை நாளில் அல்லது வார இறுதியில் வரின், அட்டை வைத்திருப்பவரின் வருமதியான திகதியானது அத்தகைய விடுமுறையை/வார இறுதியை அடுத்துவரும் முதலாவது வேலை நாளாதல் வேண்டும்.

1.26 "**PIN**" என்பது, அட்டை வைத்திருப்பவர்(கள்) அட்டையை/(அட்டைகளை) ATM பொறிகளில் இலத்திரனியல் முறையில் பாவிப்பதற்காக அவர்களுக்கு வழங்கப்படும் ஆள் அடையாள இலக்கம் எனப் பொருள்படும்.

1.27 "**POS**" என்பது, எந்த விற்பனை முனையங்கள் ஊடாக அட்டை கொடுக்கல் வாங்கல்கள் இலத்திரனியல் முறையில் மேற்கொள்ளப்படுகின்றனவோ அந்த விற்பனை முனையங்கள் எனப் பொருள்படும்.

1.28 "**முதனிலை அட்டை வைத்திருப்பவர்**" என்பது, குறைநிரப்பு அட்டை வைத்திருப்பவரைத் தவிர எந்த ஆளுக்கு முதனிலை அட்டை வழங்கப்பட்டு அவர் பெயரில் வங்கியால் முதலில் அட்டைக் கணக்கு திறக்கப்பட்டு பேணப்படுகின்றதோ அந்த ஆள் ஒருவர் எனப் பொருள்படும்.

1.29 "**ரூபா**" (Rs) என்பது, இலங்கை ரூபா எனப் பொருள்படும்.

1.30 "**பிணைப்பொறுப்பு**" என்பது, கடன் அட்டை வைத்திருப்பவரின் கடப்பாட்டை நிறைவேற்றுவதற்காக அத்துடன்/ அல்லது கடன் அட்டைகளை வழங்கும் நோக்கத்திற்காக பிணைப்பொறுப்பொன்றாக வைத்திருக்கப்படும் வைப்பீடு அல்லது உத்தரவாதம் எனப் பொருள்படும்.

1.31 "**கணக்குக் கூற்று**" என்பது, அட்டை வைத்திருப்பவர் வங்கிக்குச் செலுத்த வேண்டிய நடைமுறை நிலுவையைப் பற்றிய விவரங்களைக் காட்டி அவருக்கு வங்கியால் அனுப்பப்படும் வங்கியின் மாதாந்த அல்லது பருவ காலக் கூற்று எனப் பொருள்படும்.

1.32 "**கணக்குக் கூற்றுத் திகதி**" என்பது கணக்குக் கூற்று குறிப்பீடு செய்யும் கட்டணப்பட்டியல் காலப்பகுதியின் கடைசித் தினம் எனப் பொருள்படும் என்பதுடன், அந்தத் திகதியன்று அலுவல்கள் மூடப்படும்வரை வங்கியால் செயல்முறைப்படுத்தப்பட்ட அனைத்துப் பதிவுகளையும் உள்ளடக்கும்.

1.33 "**குறைநிரப்பு அட்டை**" என்பது, வங்கியுடன் இந்த உடன்படிக்கையைச் செய்துகொள்ளும் முதனிலை கடன் அட்டை வைத்திருப்பவரின் வேண்டுகோளின்பேரில் மூன்றாம் திறத்தவர் ஒருவருக்கு வழங்கப்படும் ஒரு அட்டை எனப் பொருள்படும்.

1.34 "**குறைநிரப்பு அட்டை வைத்திருப்பவர்**" என்பது, எந்த ஆளுக்கு குறைநிரப்பு அட்டை ஒன்று வழங்கப்பட்டுள்ளதோ அந்த ஆள் எனப்பொருள்படும்.

1.35 "**முனையம்**" என்பது, எந்த முனையத்தின் ஊடாக அட்டைக் கொடுக்கல் வாங்கல்களை இலத்திரனியல் முறையில் மேற்கொள்ளலாமோ, அந்த ஏதேனும் தன்னியக்க காசுப் பொறி (ATM) அல்லது விற்பனை மையங்கள் (POS) எனப் பொருள்படும்.

1.36 "**கொடுக்கல் வாங்கல் திகதி**" என்பது, அட்டை வைத்திருப்பவருக்கும் வணிகர் ஒருவருக்கும் இடையில் அட்டைக் கொடுக்கல் வாங்கல் இடம்பெறும் திகதி எனப் பொருள்படும்.

1.37 "**கொடுக்கல் வாங்கல் செயல்முறைப்படுத்தும் (புறக்குறிப்பு) திகதி**" என்பது, அட்டை கணக்கில் அட்டைக் கொடுக்கல் வாங்கல் செயல்முறைப்படுத்தப்படும் திகதி எனப் பொருள்படும்.

1.38 "**பயன்பாடு**" என்பது தண்ணீர், மின்சாரம் மற்றும் தொடர்பாடல் உட்பட ஆனால் அவற்றிற்கு மட்டுப்படுத்தப்படாமல் பயன்பாடுகளையும் பொருட்களையும் சேவைகளையும் வழங்கும் ஏதேனும் கம்பனி, நிறுவனம், அதிகாரசபை அல்லது அமைப்பு எனப் பொருள்படும்.

2. அட்டை

2.1 அட்டை வங்கியின் சொத்தாகும் என்பதுடன் வங்கியால் வேண்டுகோள் விடுக்கப்படுவதன் மீது வங்கிக்கு உடனடியாக திருப்பிக் கொடுக்கப்படுதலும் வேண்டும்.

2.2 அட்டையை கைமாற்ற முடியாது. அது அட்டை வைத்திருப்பவராலேயே பிரத்தியேகமாகப் பயன்படுத்தப்படும். அட்டை வைத்திருப்பவர் எத்தன்மையதுமான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அட்டையை அத்துடன்/அல்லது PIN இலக்கத்தை வேறு எவரேனும் தனியாள் பயன்படுத்துவதை அனுமதித்தலாகாது. அட்டை வைத்திருப்பவர் எத்தன்மையதுமான ஏதேனும் நோக்கத்திற்காக அட்டையை பிணைப்பொறுப்பாக பிணையம் வைத்தலாகாது.

2.3 வங்கி அதன் முழுத் தற்றுணிபின்படியும் முன் அறிவித்தலோ காரணமோ இன்றியும் அட்டையையும் அட்டையைப் பயன்படுத்துவதற்கு அட்டையை வைத்திருப்பவரின் உரிமையையும் மீளப்பெறலாம் என்பதுடன் அட்டையின் ஏதேனும் கொடுக்கல் வாங்கலுக்கு அதிகாரமளிக்குமாறு விடுக்கப்படும் வேண்டுகோளையும மறுக்கலாம்.

2.4 வங்கி அதன் முழுத் தற்றுணிபின்பேரில் அட்டையை மீள வழங்கலாம், புதுப்பிக்கலாம் அல்லது மாற்றீடு செய்யலாம் அல்லது அவ்வாறு செய்ய மறுக்கலாம்.

2.5 அட்டை எல்லா நேரங்களிலும் பாதுகாப்பான ஓரிடத்தில் வைத்திருக்கப்படுவதை அட்டை வைத்திருப்பவர் உறுதிப்படுத்துதல் வேண்டும்.

3. அட்டையை ஒப்படைத்தலும் பயன்படுத்துதலும்

3.1 அட்டையானது அட்டை வைத்திருப்பவரால் பெற்றுச் செல்லப்படலாம் அல்லது அட்டை வைத்திருப்பவரால் வங்கிக்கு அறிவிக்கப்பட்ட முகவரிக்கு அஞ்சலில் அல்லது தூதுவர் ஒப்படைச் சேவைமூலம் (கூரியர்) அனுப்பப்படலாம் அல்லது பெயர் குறித்து நியமிக்கப்பட்ட மூன்றாம் திறத்தவர் ஒருவரால் அட்டை வைத்திருப்பவரின் பொறுப்பில் எடுத்துச் செல்லப்படலாம் அல்லது அவருக்குக் கையளிக்கப்படலாம்.

3.2 அட்டை கிடைக்கப்பெற்றதன் மீது அட்டை வைத்திருப்பவர் அட்டையின் பின்புறத்தில் உடனடியாகக் கையொப்பமிடுதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய கையொப்பம் அத்துடன்/அல்லது செயற்படுத்துகை அத்துடன்/அல்லது அதன் பாவனை இதன்கண் அடங்கியுள்ள நியதி நிபந்தனைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டமைக்கு பிணிக்கின்றதும் முடிவானதுமான சான்றாதல் வேண்டும்.

3.3 அட்டை வைத்திருப்பவர் இந்த நியதி நிபந்தனைகளால் பிணிக்கப்பட விரும்பாதபட்சத்தில் அட்டை வைத்திருப்பவர் அட்டையை இரண்டு பாதிகளாக வெட்டி இரண்டு பாதிகளையும் வங்கிக்கு திருப்பிக்கொடுத்தல் வேண்டும் என்பதுடன் இதன்பின்னர் **வாசகம் 17 (முடிவுறுத்துதல்)** நடைமுறையிலிருத்தல் வேண்டும். அட்டை தொடர்பிலும், வங்கியுடனும் எல்லாக் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பிலும் அனைத்து நேரங்களிலும் கடன் அட்டை வைத்திருப்பவர் நல்லெண்ணத்துடன் செயற்படுவதற்குப் பொறுப்பேற்கின்றார்.

3.4 அட்டை அது பயன்படுத்தப்படும் நேரத்தில் இந்த உடன்படிக்கையின் எல்லா நியதிகளுக்கும் அமைந்ததாகும்.

3.5 அட்டை கடன் வரையறை மட்டுமே பயன்படுத்தப்படலாம்.

3.6 அட்டையின் பயன்பாடு தொடர்பில் வங்கியால் காலத்துக்குக் காலம் கிடைக்கச் செய்யப்படும் வசதிகளையும் நன்மைகளையும் அட்டை வைத்திருப்பவர் பயன்படுத்தலாம்.

3.7 அட்டையின் மீது புடைப்புருவில் அச்சிடப்பட்டுள்ள செல்லுபடியாகும் காலத்தின்போது வங்கி அதன் முழுத் தற்றுணிபின்பேரிலும் முன்னறிவித்தல் இன்றியும் ஏதேனும் நேரத்தில் அட்டையைப் பயன்படுத்துவதற்கான உரிமையை மீளப் பெறலாம் அல்லது குறிப்பிட்ட அட்டைக் கொடுக்கல் வாங்கல் எதற்கும் அதிகாரமளிக்குமாறு விடுக்கப்படும் வேண்டுகோளை மறுக்கலாம் அல்லது அத்தகைய மீளப்பெறுதலை அல்லது மறுப்பை வெளியிடலாம்.

3.8 அட்டை வைத்திருப்பவர்கள் இந்த அட்டையை மூலதனக் கொடுக்கல் வாங்கல்களுக்கு அல்லது வர்த்தக நோக்கங்களுக்கென பொருட்களை கொள்வனவு செய்வதற்குப் பயன்படுத்துதலாகாது.

3.9 அட்டையை இலங்கைக்கு வெளியே பயன்படுத்துவது இலங்கை மத்திய வங்கியால், செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்தால் அல்லது வேறு ஏதேனும் ஒழுங்குபடுத்தும் குழுமத்தினால் காலத்துக்குக் காலம் விதித்துரைக்கப்பட்டவாறாகும். அட்டை வைத்திருப்பவர் இலங்கை மத்திய வங்கியால், வங்கியால் நீதிமன்றத்தால் அல்லது வேறு ஒழுங்குபடுத்தும் குழுமத்தால் அவருக்கெதிராக ஏதேனும் உரிமைக்கு, நிவாரணத்திற்கு அல்லது வங்கிக்குப் பங்கமின்றி எல்லா நிலுவைகளையும் செலுத்தித் தீர்ப்பதற்குப் பொறுப்புடையவராதல் வேண்டும்.

3.10 அட்டையில் புடைப்புருவில் அச்சிடப்படுள்ள முடிவுறு திகதி வரை, அட்டைக் கணக்கின் அந்தஸ்து அத்தகைய முடிவுறு திகதி வரை நடைமுறையில் இருத்தல் வேண்டும் என்ற நிபந்தனையின் மீது அட்டைக் கொடுக்கல் வாங்கல்களுக்கு அட்டை பயன்படுத்தப்படலாம்.

3.11 அட்டையுடனும் வங்கியுடனுமான எல்லா நடவடிக்கைகளிலும் எல்லா நேரங்களிலும் நல்லெண்ணத்துடன் செயற்படுவதனை அட்டை வைத்திருப்பவர் பொறுப்பேற்கின்றார்.

4 PIN இலக்கத்தை வழங்குதலும் அட்டை மற்றும் PIN இலக்கத்தை இழத்தலும்

4.1 அட்டையை ஏற்றுக்கொள்ளும் ஏதேனும் ATM பொறியில் அட்டை வைத்திருப்பவர் பயன்படுத்துவதற்கென வங்கி PIN இலக்கமொன்றை வழங்கலாம். PIN அட்டை வைத்திருப்பவருக்கு அவரது முகவரிக்கு அவரது பொறுப்பில் அஞ்சலில் அனுப்பப்படலாம் அல்லது ஒப்படைத் தூதுவர் சேவை (Courier) மூலம் அனுப்பப்படலாம் என்பதற்கு அட்டை வைத்திருப்பவர் உடன்படுகின்றார்.

4.2 PIN இலக்கத்தைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் எல்லா அட்டைக் கொடுக்கல் வாங்கல்களுக்கும் அட்டை வைத்திருப்பவர் முழுப்பொறுப்புடையவராதல் வேண்டும்.

4.3 அட்டையும் PIN இலக்கமும் காணாமற் போவதை அல்லது களவு போவதைத் தடுப்பதற்காக PIN இலக்கத்தினதும் அட்டையினதும் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு அட்டை வைத்திருப்பவர் சாத்தியப்படக்கூடிய எல்லா கவனத்தையும் பயன்படுத்துதல் வேண்டும்.

4.4 அட்டை காணாமற்போகும் பட்சத்தில் அல்லது களவுபோகும் பட்சத்தில் அட்டை வைத்திருப்பவர் காணாமற்போனமையை அல்லது களவு போனமையைப் பற்றி உடனடியாக அதன் விவரங்களுடன் தொலைபேசி, தொலைநகல் அல்லது டெலெக்ஸ் ஊடாக வங்கிக்கு அல்லது இயைபான கொடுப்பனவு ஒழுங்கமைப்பின் ஏதேனும் உறுப்பினரான வங்கிக்கும் அல்லது அதன் பிரதிநிதித்துவ அலுவலகத்திற்கும் அத்தகைய காணாமற்போனமை அல்லது களவு இடம்பெற்ற நாட்டின் பொலிசுக்கும் அறிவித்தல் வேண்டும். எனினும் ஏதேனும் அத்தகைய விடயத்தில் தொலைபேசி, தொலைநகல் அல்லது டெலெக்ஸ் செய்தி எழுத்தில் உறுதிப்படுத்தப்படுதல் வேண்டும்.

4.5 அட்டை காணாமற்போனமை அல்லது களவுபோனமை பற்றி வங்கிக்கு அறிவிக்கப்பட்டு உறுதிப்படுத்தப்பட்டமையும் உறுதிப்படுத்தப்படும்வரை அதிகாரமளிக்கப்படாமல் அட்டை பயன்படுத்தப்பட்டதன் விளைவாக அட்டைக் கணக்கில் பற்று வைக்கப்படும் எல்லா தொகைகளுக்கும் அட்டை வைத்திருப்பவரே பொறுப்பாளியாதல் வேண்டும்.

4.6 அட்டை வைத்திருப்பவர் அட்டை காணாமற்போனமை, களவுபோனமை அல்லது துஷ்பிரயோகம் செய்யப்பட்டமை தொடர்பாக தம்மகத்தேயுள்ள சூழ்நிலைகளையும் பற்றிய எல்லா தகவல்களையும் வங்கிக்குக் கொடுத்தல் வேண்டும். அத்துடன் காணாமற்போன அல்லது களவுபோன அட்டையை மீட்டுப்பெறுவதற்கு அவசியமானவை என வங்கியால் கருதப்படும் எல்லா நடவடிக்கைகளையும் எடுத்தல் வேண்டும்.

4.7 வங்கி அதன் ஏக தற்றுணிபின்படி பொருத்தமானதென வங்கி கருதக்கூடிய இந்த நியதி நிபந்தனைகளுக்கமைய காணாமற்போன அல்லது களவுபோன அட்டைக்கு மாற்றீடு ஒன்றை அல்லது புதிய PIN இலக்கமொன்றை வழங்கலாம்.

4.8 அட்டை வைத்திருப்பவர் காணமாற்போன அல்லது களவுபோன அட்டையை மீட்டுப்பெறும் பட்சத்தில் அதனைப் பயன்படுத்தாமல் அதனை அரைவாசியாக வெட்டி உடனடியாக வங்கிக்கு திருப்பிக்கொடுத்தல் வேண்டும். PIN இலக்கம் வேறு எவரேனும் திறத்தவருக்கு வெளிவிடப்பட்டமை பற்றி வங்கிக்கு அறிவித்ததன் பின்னர் அட்டை வைத்திருப்பவர் PIN இலக்கத்தைப் பயன்படுத்துதலாகாது.

4.9 காணாமற்போன அட்டைகள் தொடர்பில் வங்கி வணிகர் வலையமைப்பிற்கு அறிவிப்பதிலும் புதிய அட்டையொன்றை வழங்குவதிலும் ஏற்படும் நிர்வாகச் செலவை ஈடுசெய்வதற்கு கட்டணமொன்றை அறவிடும்.

5. அட்டைக் கணக்கு

5.1 வங்கி அட்டைக் கணக்கிற்கு அட்டைக் கொடுக்கல் வாங்கல்களின் தொகைகளையும் வங்கிக்கு வருமதியான எவையேனும் கட்டணங்களையும் ஏதேனும் சட்டக் கட்டணங்கள், வங்கியால் உறப்பட்ட எல்லா நிர்வாகச் செலவுகளும் அட்டையின் பயன்பாடு தொடர்பில் வங்கியால் உறப்பட்ட ஏதேனும் இழப்பும் உட்பட அட்டை வைத்திருப்பவரின் மற்றெல்லாப் பொறுப்புக்களையும் பற்றுவைக்கலாம். அவ்வாறு பற்றுவைக்கப்பட்ட எல்லாத் தொகைகளையும் விற்பனை அல்லது முற்பண உறுதிச்சீட்டு அட்டை வைத்திருப்பவரால் கைச்சாத்திடப்பட்டிருப்பினும் சரி அல்லாவிடினும் சரி வங்கிக்குச் செலுத்துவதற்கு முதனிலை அட்டை வைத்திருப்பவரும் குறைநிரப்பு அட்டை வைத்திருப்பவரும் கூட்டாகவும் தனித்தும் பொறுப்புடையவர்களாதல் வேண்டும்.

5.2 வங்கி, அட்டை வைத்திருப்பவருக்கு கணக்குக் கூற்றொன்றை அனுப்பும். அவர் குறிப்பிடப்பட்ட ''கொடுப்பனவு வருமதியாகும் திகதி'' யன்று அல்லது அதற்கு முன்னர் வருமதியான குறைந்தபட்ச தொகை எனக் காட்டப்படும் தொகையை மட்டுமாவது வங்கிக்குச் செலுத்துதல் வேண்டும். ஆயினும் அவர் அவரது தற்றுணிபின்படி வருமதியான முழுத் தொகையையும் அல்லது வருமதியான குறைந்தபட்சத் தொகைக்கு மேற்பட்ட ஏதேனும் தொகையைச் செலுத்தலாம். கொடுப்பனவுக்கான கடைசி திகதி வங்கி விடுமுறை நாளன்று வருமிடத்து கொடுப்பனவு உடனடுத்துவரும் வேலை நாளன்று செலுத்தப்படுதல் வேண்டும்.

5.3 இந்த உடன்படிக்கையின் ஏதேனும் மீறுகை இடம்பெறும் பட்சத்தில் அல்லது அட்டை வைத்திருப்பவரால் வங்கி முறிவுச் செயல் ஒன்று புரியப்படுவதன் மீது அல்லது முதனிலை அட்டை வைத்திருப்பவரின் இறப்பின் மீது அல்லது வங்கியின் முழுத் தற்றுணிபின்பேரில் இந்த உடன்படிக்கையின் கீழ் வருமதியான எல்லாத் தொகைகளும் உடனடியாக, ஆயினும் ஏதேனும் நியதிச் சட்டத்தால் விதிக்கப்படும் ஏதேனும் வரையறைக்கு அமைய செலுத்தப்படல் வேண்டும்.

5.4 ஏதேனும் கொடுப்பனவு வங்கியால் அறிவிக்கப்பட்ட முகவரியில் பெறப்பட்டு அட்டைக் கணக்கில் வரவுவைக்கப்படும்போது மட்டுமே பயனுறும். இந்த உடன்படிக்கையின்கீழ் அட்டை வைத்திருப்பவரின் கடப்பாடுகள் தொடர்பில் வங்கிக்கு வழங்கப்பட்ட ஏதேனும் காசோலையை ஈடுசெய்வதற்கு கணக்கில் நிதி இருப்பதனை முதனிலை அட்டை வைத்திருப்பவர் உறுதிப்படுத்துதல் வேண்டும்.

6. கடன் வரையறை

6.1 கடன் வரையறை வங்கியின் ஏக தற்றுணிபின்பேரில் தீர்மானிக்கப்பட்டு அட்டை வைத்திருப்பவருக்கு எழுத்தில் அறிவிக்கப்படும். எழுத்திலான அறிவித்தல் கொடுப்பதன் மூலம் காலத்துக்குக் காலம் கடன் வரையறையை அதிகரிப்பதற்கான அல்லது குறைப்பதற்கான உரிமையும் வங்கிக்குண்டு. ரொக்கப் பணம் சார்ந்த மற்றும் ரொக்கப் பணம் சாராத கொடுக்கல் வாங்கல்களுக்குப் புறம்பான வரையறைகளையும் வங்கி நிர்ணயிக்கலாம். (உங்கள் அட்டைக் கணக்கின் மொத்தக் கடன் வரையறைக்கமைய).

6.2 உங்கள் அட்டைக் கணக்கிலிருக்கும் கடன் வரையறையானது நிலுவையிலிருக்கும் மீதியையும் வங்கியால் ஏற்கனவே ஏற்றுக்கொள்ளப்பட்டு அத்திகதியன்றுள்ளவாறு செயல்முறைப்படுத்துவதற்கு இன்னமும் கிடைக்கப்பெறாததுமான ஏதேனும் அட்டைக் கொடுக்கல் வாங்கலையும் கணக்கில் எடுத்ததன் பின்னர் ஏதேனும் நேரத்தில் கடன் வரையறையின் பயன்படுத்தப்படாத பெறுமதியாகும். ரொக்கப் பணம் சார்ந்ததும் ரொக்கப் பணம் சாராததுமான புறம்பான கொடுக்கல் வாங்கல் வரையறைகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளவிடத்து கடன் வசதியும் அதற்கிணங்க பிரிக்கப்படும். எப்போதும் உங்கள் கணக்கில் உள்ள கடன் தொகைக்கு உட்பட்ட முறையிலேயே உங்கள் அட்டைக் கணக்கில் (ரொக்கப்பணம் சார்ந்ததும் ரொக்கப் பணம் சாராததுமான) கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்வதனை நீங்கள் பொறுப்பேற்றல் வேண்டும்.

6.3 அட்டை வைத்திருப்பவரால் அட்டைக் கணக்கின் மீதான கடன் வரையறையை விஞ்சுதலானது உடன்படிக்கையின் நியதி நிபந்தனைகளின் மீறுகையாகக் கருதப்படும். அத்துடன் வங்கி அதன் முழுத் தற்றுணிபின்பேரில் முன்னறிவித்தலின்றி அட்டைக் கணக்கை இல்லாதொழிக்கும்.

7. முற்பணக் கொடுப்பனவு

7.1 அட்டை வைத்திருப்பவர் போதியளவு கடன் வசதி இருப்பதற்கும் செலாவணி கட்டுப்பாட்டுத் திணைக்களத்தின் ஒழுங்கு விதிகளுக்கமையவும் பின்வரும் வழிமுறைகளால் அதன் முழுத் தற்றுணிபின்பேரில் வங்கியால் ஏற்றுக்கொள்ளப்படக்கூடியவாறு கடன் வரையறையின் அதிகபட்ச நூற்றுவீதமொன்றுவரை முற்பணங்களைப் பெறலாம்:

(அ) வங்கின் ஏதேனும் கிளையில் அல்லது ஏதேனும் அங்கத்துவ நிறவனத்தில் அட்டை வைத்திருப்பவரின் ஆளடையாள சான்றுடன் சேர்த்து அட்டையைச் சமர்ப்பித்து அவசியமான கொடுக்கல் வாங்கல் பதிவுகளில் கைச்சாத்திடுவதன் மூலம்.

(ஆ) வங்கியின் அல்லது சொல்லப்பட்ட வங்கியின் அல்லது நிறுவனத்தின் ATM பொறியைப் பாவிப்பதற்கு வேறு எந்த வங்கியுடன் அல்லது நிறுவனத்துடன் வங்கி உடன்படிக்கையொன்றைச் செய்துள்ளதோ அந்த வங்கியின் அல்லது நிறுவனத்தின் ATM பொறியைப் பாவிப்பதன் மூலம். இந்த விடயத்தில் முற்பணக் கொடுப்பனவு ஒவ்வொன்றினதும் தொகை இயைபான ATM பொறியின் ஏற்புடைத்தான தினசரி மீளப்பெறுதலின் வரையறைக்கு அமைவானதாகும்.

7.2 முற்பணக்கொடுப்பனவுகள் தொடர்பில் ATM, வங்கி, வணிகர், முகவர், உள்ளூர் அல்லது பிராந்திய வரையறைகள், மட்டுப்பாடுகள், செலாவணிக் கட்டுப்பாட்டு ஒழுங்குவிதிகள், அத்துடன்/அல்லது காலத்துக்குக் காலம் வழங்கப்படும் வேறு கட்டுப்படுத்தும் அதிகாரசபையின் மட்டுப்பாடுகள் என்பன ஏற்புடையவனவாதல் வேண்டும்.

7.3 ATM பொறியொன்றில் கொடுக்கல் வாங்கல் ஒன்றைப் பயனுறுத்தும்போது அட்டையுடன் சேர்த்துப் பயன்படுத்தப்படுவதற்கு வங்கி PIN இலக்கமொன்றை வழங்கும். அட்டை வைத்திருப்பவர் எத்தன்மையவையுமான எவையேனும் சூழ்நிலைகளிலும் PIN இலக்கத்தை வேறு எவரேனும் ஆளுக்கு வெளிவிடுதலாகாது.

7.4 PIN இலக்கத்துடன் சேர்த்துப் பயனுறுத்தப்பட்ட ஏதேனும் அட்டைக் கொடுக்கல் வாங்கல் பற்றிய வங்கியின் பதிவு அட்டை வைத்திருப்பவரைப் பிணிக்கின்றதாதல் வேண்டும். வங்கியின் இலத்திரனியல் முறைமையிலுள்ள தகவல் அட்டை வைத்திருப்பவர் அட்டைக் கொடுக்கல் வாங்கலுக்கு அதிகாரமளித்துள்ளார் என்பதற்கு முடிபான எண்பிப்பாதலும் அட்டை வைத்திருப்பவர் மீது பிணிக்கின்றதாதலும் வேண்டும்.

7.5 முற்பணமொன்றைப் பெறுவதற்கு அட்டை வைத்திருப்பவரால் அட்டையின் பயன்பாடானது வங்கியால் காலத்துக்குக் காலம் விதித்துரைக்கப்பட்டவாறு முற்பணத்தொகையின் மீது நிதி அறவீடொன்றையும் வட்டியையும் கட்டணங்களையும் செலுத்துவதற்கு அட்டை வைத்திருப்பவரின் உடன்படிக்கையாக கருதப்படும். முற்பணக் கொடுப்பனவு ஒவ்வொன்றின்மீது முற்பணத் திகதியிலிருந்து முழுமையாக மீளச்செலுத்தப்படும்வரை நிதி அறவீடொன்று விதிக்கப்படும். அட்டை வைத்திருப்பவரால் செலுத்தப்படும் நிதி அறவீட்டின் தொகையை வங்கி காலத்துக்குக் காலம் வேறுபடுத்தலாம்.

7.6 அட்டையின் மீது கொள்வனவு செய்யப்பட்ட பிரயாணிகள் காசோலைகள், கோரிக்கை வரைவுகள், தந்தி மாற்றல்கள் முதலான சாதனம் எதுவும் முற்பணக் கொடுப்பனவாகக் கருதப்படுவதும் மேலே 6.5ஆம் பிரிவிலுள்ள அறவீட்டிற்கு அமைவானதுமாகும்.

7.7 இந்த வசதியானது அட்டை வைத்திருப்பவருக்கு முன்னறிவித்தலின்றி வங்கியால் மாற்றப்படலாம் அல்லது மீளப்பெறப்படலாம்.

8. குறைநிரப்பு அட்டை

8.1 முதனிலை அட்டை வைத்திருப்பவரால் பெயர் குறித்து நியமிக்கப்பட்டவரும் முதனிலை அட்டை வைத்திருப்பவராலும் குறைநிரப்பு அட்டை வைத்திருப்பவராலும் கூட்டாக வேண்டுகோள் விடுக்கப்பட்டவருமான ஆளொருவருக்கு/(ஆட்களுக்கு) வங்கி அதன் முழுத் தற்றுணிபின்பேரில் குறைநிரப்பு அட்டையை/(அட்டைகளை) அங்கீகரித்து வழங்கலாம். குறைநிரப்பு அட்டை வைத்திருப்பவர் 18 வயதுடையவரும் அல்லது அதற்கு மேற்பட்டவரும் முதனிலை அட்டை வைத்திருப்பவரில் தங்கி வாழ்பவரான உடனடி குடும்ப உறுப்பினர் ஒருவராகவும் (வாழ்க்கைத் துணை, பிள்ளை, பெற்றோர், சகோதரர், அல்லது சகோதரி) இருத்தல் வேண்டும். இவர்கள் கல்வி நோக்கங்களுக்காக மாத்திரம் குறைநிரப்பு அட்டையொன்றுக்கு உரித்துடையவர்களாதல் வேண்டும் என்பதுடன் இந்த உடன்படிக்கையின் நியதி நிபந்தனைகள் அத்தகைய ஆட்களைப் பிணிக்கின்றதாதலும் வேண்டும்.

8.2 முதனிலை அட்டை வைத்திருப்பவருக்குக் குறித்தொதுக்கப்பட்ட கடன் வரையறை குறைநிரப்பு அட்டை வைத்திருப்பவரின் கடன் வரையறையையும் உள்ளடக்கும். முதனிலை அட்டை வைத்திருப்பவரும் குறைநிரப்பு அட்டை வைத்திருப்பவரும் தத்தமது அட்டைகள் ஊடாக உறப்பட்ட அறவீடுகளின் மொத்தம் மேற்படி கடன் வரையறையை விஞ்சுவதனை அனுமதித்தலாகாது.

8.3 குறைநிரப்பு அட்டையின் செல்லுபடியாகும் தன்மை முதனிலை அட்டையின் செல்லுபடியாகும் தன்மையில் தங்கியுள்ளது. குறைநிரப்பு அட்டையை முடிவுறுத்துதலானது முதனிலை அட்டையை முடிவுறுத்த மாட்டாது.

8.4 வங்கியின் மட்டில் இதன் கண் வங்கியின் உரிமைகளும் முதனிலை அட்டை வைத்திருப்பவரும் குறைநிரப்பு அட்டை வைத்திருப்பவரும் ஒருவரொருவருக்கெதிராக கொண்டிருக்கக் கூடிய ஏதேனும் பிணக்கினால் அல்லது எதிர் உரிமைக் கோரிக்கையால் எந்த விதத்திலும் பாதிக்கப்படமாட்டா.

8.5 அட்டை வைத்திருப்பவர், குறைநிரப்பு அட்டை வைத்திருப்பவர் ஆகிய இரு சாராரும் அட்டையை/(அட்டைகளைப்) பயன்படுத்தி, செயல்முறைப்படுத்தப்படும் அனைத்து அட்டைக் கொடுக்கல் வாங்கல்களுக்கும் அட்டைக் கணக்கு ஒருங்கிணைந்திருப்பினும் சரி தனித்தனியாக இருப்பினும் சரி கூட்டாகவும் தனித்தும் பொறுப்புடையவர்களாதல் வேண்டும்.

8.6 முதனிலை அட்டை வைத்திருப்பவர் வங்கிக்கு எழுத்திலான அறிவித்தல் ஒன்றை அதனுடன் சேர்த்து பாதியாக வெட்டப்பட்ட குறைநிரப்பு அட்டையையும் வங்கிக்கு அனுப்புவதன் மூலம் குறைநிரப்பு அட்டை வைத்திருப்பவரின் அதிகாரத்தை மீளப்பெறலாம்.

8.7 மேலே 8.6 இல் குறிப்பீடு செய்யப்பட்டவாறு மீளப்பெறும் திகதிக்கு முன்னர் குறைநிரப்பு அட்டை வைத்திருப்பவரால்/ அதிகாரமளிக்கப்பட்ட எல்லா அட்டைக் கொடுக்கல் வாங்கல்களும் செல்லுபடியானவையும் அட்டை வைத்திருப்பவர் மீது பிணிக்கின்றதாதலும் வேண்டும் என்பதுடன் அட்டை வைத்திருப்பவரின் பொறுப்பாதலும் வேண்டும்.

8.8 அட்டை வைத்திருப்பவரின் ஏதேனும் சட்டரீதியிலான இயலாமை அல்லது ஆற்றலின்மையின் காரணமாக அல்லது குறைநிரப்பு அட்டை வைத்திருப்பவரால் இந்த நியதி நிபந்தனைகளின் ஏதேனும் மீறுகை காரணமாக வங்கியால் சட்டம் தொடர்பாகவாயினும் சரி வேறு வகையிலாயினும் சரி உறப்பட்ட ஏதேனும் இழப்புக்கு, சேதத்திற்கு பொறுப்பிறகு அல்லது செலவுகளுக்கும் செலவினங்களுக்கும் எதிராக முதனிலை அட்டை வைத்திருப்பவர்கள் வங்கிக்கு நட்டோத்தரவாதம் செய்தல் வேண்டும்.

9. அட்டையை ஏற்றுக்கொள்ளல்

9.1 ஏற்புடைத்தானவாறு அந்தந்த முதனிலை அட்டை வைத்திருப்பவரின் அல்லது குறைநிரப்பு அட்டை வைத்திருப்பவரின் கையொப்பத்தைக் கொண்டிருந்தால் மட்டுமே அட்டைக்கு மதிப்பளிக்கப்படும். வர்த்தகத் தாபனங்களும் நிதி நிறுவனங்களும் வழமையாக உற்பத்திப் பொருட்களின் அடையாளத்தை வெளிக்காட்டி வைப்பதன்மூலம் மதிப்பளிக்கும். எத்தன்மையதுமான ஏதேனும் காரணத்திற்கான எவரேனும் வணிகர்/நிதி நிறுவனம் அட்டையை ஏற்றுக்கொள்ள மறுத்தமைக்கு வங்கி பொறுப்பாளியாகவோ பொறுப்புடைதாகவோ மாட்டாது. எவையேனும் வளவுகளில் வெளிக்காட்டி வைக்கப்படும் அட்டை ஊக்குவிப்புப் பொருட்கள் அல்லது அட்டை அடையாளங்கள் அந்த வளவுகளில் விற்பனைக்கிருக்கும் எலலாப் பொருட்களும் சேவைகளும் உங்கள் அட்டையைக் கொண்டு கொள்ளவனவு செய்யப்படலாம் என்பதற்கான ஒரு நியதி உத்தரவாதமல்ல.

9.2 பெற்றோல் கூடங்களிலிருந்தும் நிலையங்களிலிருந்தும் பெற்றோல், டீசல், எரிவாயு முதலியவற்றின் கொள்வனவு ஏற்புடைத்தான கையாளுவதற்கான சேவை அறவீடுகளுக்கு அமைவானதாகும்.

9.3 ஆயினும், நீங்கள் எவரேனும் வணிகரின்/வங்கியின் மறுப்பைப் பற்றி வங்கிக்கு அதன் புலனாய்வில் துணை புரியக்கூடிய அமைவிடத்தின் பெயர். திகதி, கொடுக்கல் வாங்கலின் திகதி, நேரம் போன்ற விவரங்களுடன் வங்கிக்கு அறிக்கையிடலாம்.

10. கணக்குக் கூற்று

10.1 வங்கி ஒவ்வொரு மாதமும் முன்னரே நிர்ணயிக்கப்பட்ட திகதியொன்றில் உங்கள் அட்டைக் கணக்கிலுள்ள கொடுக்கல் வாங்கல்கள் அடங்கிய கூற்றொன்றை வழமையான அஞ்சலின் கீழ் உங்களுக்கு அஞ்சல் செய்யும். மீதி எதுவும் நிலுவையில் இல்லையாயின் அல்லது உங்களது கடைசி கணக்குக் கூற்றின் பின்னர் அட்டைக் கொடுக்கல் வாங்கல் எவையும் இல்லையாயின் கணக்குக் கூற்று எதுவும் வழங்கப்படமாட்டாது.

10.2 எத்தன்மையனவுமான எவையேனும் காரணங்களுக்காக கணக்குக் கூற்று கிடைக்கப்பெறாமை வருமதியான குறைந்தபட்சத் தொகையையாவது செலுத்தாமலிருப்பதற்கு செல்லுபடியான காரணமாக மாட்டாது. உங்களது வழமையான கணக்குக் கூற்றுத் திகதியிலிருந்து 10 நாட்களுக்குள் உங்களுக்கு கணக்குக் கூற்று கிடைக்காவிடில் செலுத்தப்பட வேண்டிய தொகையை அறிவதற்கு வங்கிக்கு (அட்டைச் சேவைகள்) அழைப்பு கொடுக்கவும்.

10.3 உங்கள் கூற்று, உங்கள் கடைசிக் கூற்றின் திகதியிலிருந்து நடப்புக் கூற்றின் திகதியன்று அலுவலல்கள் மூடப்படும்வரை பெறப்பட்டவையும் செயல்முறைப்படுத்தப்பட்டவையுமான எல்லா கொடுக்கல் வாங்கல்களையும் பற்றிய விவரங்களைத் தரும்.

10.4 உங்கள் கூற்றில் நிலுவையிலுள்ள தொகை பின்வருவனவற்றைக் கொண்டு தயாரிக்கப்பட்டிருக்கும்:

I. உங்கள் அட்டையைப் பயன்படுத்தி கொள்வனவு செய்யப்பட்ட எல்லாப் பொருட்களினதும் சேவைகளினதும் விலை உங்கள் அட்டைக் கணக்கிற்கு அறவிடப்படுவதற்கென உங்களால் அல்லது உங்கள் எவரேனும் குறைநிரப்பு அட்டை வைத்திருப்பவரால் அதிகாரமளிக்கப்பட்ட அஞ்சல் மற்றும் தொலைபேசி தேவைக் கட்டளைகள் உட்பட.

II. தன்னியக்க பணப்பொறி ஊடாக (ATM) உறப்பட்டவை உட்பட உங்கள் அட்டைக் கணக்குமீதான முற்பணக் கொடுப்பனவுகள்.

III. இக்கடன் அட்டை நியதி நிபந்தனைகளின் வாசகம் 11இல் **(கொடுப்பனவுகளும் அறவீடுகளும்)** தரப்பட்டுள்ள அறவீடுகள் (உதாரணம்: கட்டணங்கள், சேவைக் கட்டணங்கள் போன்ற). நடைமுறையிலுள்ள அரசாங்க வரிகள் மற்றும் கடன் அட்டையைப் பயன்படுத்தி உறப்பட்ட வட்டி உட்பட வேறு எல்லா வங்கி அறவீடுகளும்.

11. கொடுப்பனவும் அறவீடுகளும்

இப்பிரிவில் குறிப்பீடு செய்யப்படும் எல்லா நடைமுறைக் கட்டணங்களும் அறவீடுகளும் வங்கியால் வெளியிடப்படும் சேவை மற்றும் விலை வழிகாட்டியில் குறிப்பிடப்படுகின்றன. இதன் பிரதி வேண்டுகோளின்பேரில் கிடைக்கும். இந்த அறவீடுகள் முன்னறிவித்தலுடன் காலத்துக்குக் காலம் திருத்தப்படலாம்.

11.1 அட்டையும் குறைநிரப்பு அட்டையும் வழங்கப்படும்போது அவற்றிற்கு வங்கியால் விதித்துரைக்கப்பட்ட சேரும் கட்டணமொன்றையும் ஆண்டுக் கட்டணம் ஒன்றையும் (வங்கியின் வேண்டுகோளின்பேரில்) வங்கிக்குச் செலுத்துவதற்கு அட்டை வைத்திருப்பவர் உடன்படுகின்றார். அட்டை முடிவுறுத்தப்பட்டால் அல்லது ஏற்றுக்கொள்ளப்படாவிட்டால் ஆண்டுக் கட்டணம் மீளளிக்கப் படமாட்டாது.

11.2 கணக்குக் கூற்றில் குறித்துரைக்கப்பட்டதும் வருமதியானதும் கணக்குக் கூற்றில் குறித்துரைக்கப்பட்ட திகதிக்குப் பிந்தாமல் முழுமையாக செலுத்தப்பட வேண்டிய நடைமுறை மீதி என விவரிக்கப்படுவதுமான எல்லா அறவீடுகளினதும் மொத்தத் தொகையைச் செலுத்துவதற்கு அட்டை வைத்திருப்பவர் உடன்படுகின்றார். நடைமுறை மீதியின் கொடுப்பனவு (முற்பணம் புறநீங்கலாக) கொடுப்பனவு வருமதியான திகதியன்று அல்லது அதற்கு முன்னர் வங்கியால் பெறப்படின் அட்டை வைத்திருப்பவருக்கு நிதி அறவீடு எதுவும் ஏற்படமாட்டாது.

11.3 கடனட்டை உரிமையாளர் மீள்செலுத்த வேண்டிய மொத்தத் தொகையை செலுத்த வேண்டிய திகதியில் செலுத்தாவிடின், அதற்கு வங்கியால் நியமிக்கப்பட்ட வட்டி வீதத்தின் அடிப்படையில் வட்டி கணிப்பிடப்படும். நடைமுறை மாதத்திற்கான பட்டியலில் காணப்படும் மீதிக்கு அம்மாதத்தின் முதல் நாள் தொடக்கம் அடுத்த மாத பட்டியல் திகதி வரை தினமும் இவ்வட்டியானது கணிப்பிடப்படும். மேற்கூறப்பட்ட காலப்பகுதியின் போது பெற்றுக்கொள்ளப்படும் பட்டியல்கள் வட்டி கணிப்பீட்டில் உள்ளடங்காது. ஏதேனும் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருப்பின் அவை கருத்தில் கொள்ளப்படும்.

11.4 வட்டி வங்கியால் காலத்துக்குக் காலம் தீர்மானிக்கப்பட்ட மாதாந்த வீதமொன்றின்படி அறவிடப்படும். வட்டி அறவிடுவதற்கான பொதுவான நடைமுறை அட்டைக் கணக்கொன்றுக்கு கொடுப்பனவொன்று செய்யப்படுமிடத்து முழுப் பற்று மீதியின் மீதும் அத்தகைய கொடுப்பனவுத் திகதி வரையிலும், எல்லா பகுதிக் கொடுப்பனவுகளுக்கும் அத்தகைய கொடுப்பனவு திகதிவரை நிலுவையிலுள்ள மீதியின் மீதும் அப்போதும் கணக்குக் கூற்று பெறப்படும் திகதியன்று மீதி எதுவும் நிலுவையாகவிருப்பின் அத்தகைய நிலுவையிலுள்ள தொகையின் மீது அந்தத் திகதி வரை வட்டி அறவிடப்படும்.

11.5 அட்டைக் கணக்கொன்று ஆரம்பிக்கப்பட்டதையடுத்து அட்டை வைத்திருப்பவரால் பெறப்படும் முதலாவது கணக்குக் கூற்று கணக்கு ஆரம்பிக்கப்பட்ட திகதியிலிருந்து கணக்குக் கூற்று பெறப்படுகின்றதும் அறவீடுகள் வருமதியாகின்றதுமான திகதி வரை மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்களின் விவரங்களைக் கொண்டிருக்கும். முற்பணக்கொடுப்பனவொன்று பெறப்பட்டிருந்தாலன்றி, அத்தகைய விடயத்தில் வட்டி அறவீடொன்றிருக்கும், வட்டி அறவீடு எதுவும் கணக்குக் கூற்றில் காட்டப்படமாட்டாது. கொடுப்பனவு வருமதியாகும் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் முழுக் கொடுப்பனவும் பெறப்பட்டிருப்பின் வட்டி எதுவும் அறவிடப்படமாட்டாது.

11.6 முழுக்கொடுப்பனவுக்கும் அல்லாமல் குறைந்தபட்சத் தொகைக்கு அல்லது குறைந்தபட்சத் தொகைக்குமேல் ஏதாவது தொகைக்கு கொடுப்பனவு செய்யப்படுமிடத்து வட்டி அறவிடப்படும். ஆனால் விலைப்பட்டியலிடப்படும் அந்தக் காலப்பகுதிக்கு வருமதியான கொடுக்கல் வாங்கல்களுக்கு (முற்பணக் கொடுப்பனவுகளைத் தவிர), அந்தக் கட்டத்தில் வட்டி எதுவும் அறவிடப்படமாட்டாது.

11.7 எனவே கணக்குக் கூற்றில் காட்டப்படும் முழுத் தொகையினதும் கொடுப்பனவைச் செய்யும் அட்டை வைத்திருப்பவர் அவரது கொடுக்கல் வாங்கல்களுக்கு (முற்பணக் கொடுப்பனவுகளைத் தவிர) வட்டி செலுத்துவதிலிருந்து விடுவிக்கப்படுவார்.

11.8 முற்பணக் கொடுப்பனவுகளுக்கு மீளப் பெறும் திகதியிலிருந்து முழுமையாக செலுத்தித் தீர்க்கப்படும் திகதி வரை வட்டி அறவிடப்படும்.

11.9 வருமதியான குறைந்தபட்சத் தொகை கொடுப்பனவு வருமதியான திகதியன்று அல்லது அதற்கு முன்னர் செலுத்தப்படாவிடில் அட்டை வைத்திருப்பவர் வட்டிக்கு மேலதிகமாக காலத்துக்குக் காலம் வலுவிலிருக்கும் தாமதக் கொடுப்பனவுக் கட்டணமொன்றைச் செலுத்துவதற்கு ஆளாவார்.

11.10 அட்டை வைத்திருப்பவர் பின்வரும் அறவீடுகளையும் கட்டணங்களையும் அவை ஏற்புடைத்தாகுமிடத்து வங்கியால் காலத்துக்குக் காலம் தீர்மானிக்கப்பட்ட வீதங்களில் வங்கிக்குச் செலுத்துவதற்கு உடன்படுகின்றார்.

11.11 அட்டை வைத்திருப்பவர் நடைமுறை மீதியை கொடுப்பனவு வருமதியான திகதியளவில் செலுத்தித் தீர்க்காவிடில் கொடுப்பனவு எவையும் அட்டைக் கணக்கில் வரவு வைக்கப்படும் வரையிலும் அதன் பின்னர் குறைக்கப்பட்ட மீதியின் மீதும் தினசரி அடிப்படையில் கணிப்பிடப்பட்ட நிதி அறவீடொன்று நடைமுறை மீதியுடன் சேர்க்கப்படும்.

11.12 அட்டை வைத்திருப்பவரிடமிருந்து வங்கியால் பெறப்பட்ட எல்லாக் கொடுப்பனவுகளும் பின்வரும் கொடுப்பனவு வரிசைக் கிரமத்தின்படி அல்லது வங்கி பொருத்தமானதெனக் கருதும் வேறு முந்துரிமை வரிசைக் கிரமப்படி பிரயோகிக்கப்படலாம்.

11.12.1 ஏதேனும் முந்திய கணக்குக் கூற்றில் காட்டப்படும் செலுத்தப்படாதிருக்கும் எல்லா நிதி அறவீடுகள், சேவை அறவீடுகள், கட்டணங்கள், முற்பணக் கொடுப்பனவுகள் மற்றம் வேறு செலவுகள்.

11.12.2 நடைமுறை கணக்குக் கூற்றில் காட்டப்படும் செலுத்தப்படாதிருக்கும் எல்லா நிதி அறவீடுகள், சேவை அறவீடுகள், கட்டணங்கள், முற்பணக் கொடுப்பனவுகள், மற்றும் வேறு செலவுகள்.

11.12.3 ஏதேனும் முந்திய கணக்குக் கூற்றில் காட்டப்பட்டவாறு செலுத்தப்படாதிருக்கும் எல்லா அட்டைக் கொடுக்கல் வாங்கல்களும் கொள்வனவு கொடுக்கல் வாங்கல்களும்.

11.12.4 நடைமுறைக் கணக்குக் கூற்றில் காட்டப்பட்டவாறு செலுத்தப்படாதிருக்கும் எல்லா அட்டைக் கொடுக்கல் வாங்கல்களும் கொள்வனவு கொடுக்கல் வாங்கல்களும்.

11.12.5 நடைமுறைக் கணக்குக் கூற்றில் இன்னமும் காட்டப்படாத எல்லா நிதி அறவீடுகள், சேவை அறவீடுகள், கட்டணங்கள், முற்பணக் கொடுப்பனவுகள், வேறு செலவுகள் மற்றும் அட்டைக் கொடுக்கல் வாங்கல்கள்.

11.13 ஆண்டுக் கட்டணங்களின் வீதம், முறை அல்லது கணிப்பீடு, கையாளும் அறவீடுகள், மேலதிக அறவீடுகள் நிதி அறவீடுகள், குறித்துரைக்கப்பட்ட வருமதியான குறைந்தபட்சத் தொகை அத்துடன்/அல்லது தாமதக் கொடுப்பனவுக் கட்டணங்கள் அல்லது வேறு எவையேனும் அறவீடுகள் என்பவற்றை அதன் ஏக தற்றுணிபின்படி வேறுபடுத்துவதற்கு வங்கி உரித்துடையதாதல் வேண்டும்.

11.14 மாற்றீட்டு அட்டையொன்றை வழங்குமாறு வங்கிக்கு வேண்டுகோள் ஒன்று விடுப்பதன் மீது வங்கியால் விதித்துரைக்கப்பட்டவாறான மாற்றீட்டு அறவீடொன்று உடனடியாக அட்டை வைத்திருப்பவரால் வங்கிக்கு செலுத்தப்படல் வேண்டும். விற்பனை உறுதிச்சீட்டுக்கள், முற்பணச் சிட்டைகள் என்பவற்றின் பிரதிகளை வழங்குவதற்கும் அத்துடன் வங்கி காலத்துக்குக் காலம் வழங்கக்கூடிய எவையேனும் மேலதிக சேவைகளுக்கும் என வங்கிக்கு விடுக்கப்படும் வேண்டுகோளின்மீது உடனடியாக வங்கியால் விதித்துரைக்கப்படக்கூடியவாறான மேலதிக அறவீடுகள் அட்டை வைத்திருப்பவரால் வங்கிக்குச் செலுத்தப்படல் வேண்டும்.

11.15 ஏதேனும் நேரத்தில் உரிய சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு வங்கிக்குள்ள உரிமைகளுக்குப் பங்கமின்றி நிலுவையிலுள்ள முழுத் தொகையினதும் அல்லது பகுதியளவிலான கொடுப்பனவுக்கு அட்டை வைத்திருப்பவரால் வரையப்பட்டவையும் திருப்பியனுப்பப்பட்டவையும் செலுத்தப்படாதவையுமான காசோலைகளுக்கு வங்கி கட்டணங்கள் அறவிடலாம்.

11.16 அட்டைக் கணக்கின் கீழ் அல்லது ஏதேனும் நேரத்தில் அட்டை வைத்திருப்பவரிடமிருந்து வங்கிக்கு எவையேனும் பணத்தொகைகள் வருமதியாக இருப்பின் அல்லது ஏதேனும் வங்கிக் கணக்கின் மீது அல்லது நடைமுறையாயினும் சரி வேறு வகையிலாயினும் சரி வேறு ஏதேனும் கணக்கின் மீது அல்லது அத்தகைய கணக்குகளை வழங்குவதில் அட்டை வைத்திருப்பவரால் தவணை தவறுகை புரியப்படின் அட்டை வைத்திருப்பவருக்கு வங்கியால் வழங்கப்பட்ட வேறு எவையேனும் வங்கித்தொழில் வசதிகளில் அட்டை வைத்திருப்பவர் ஏதேனும் முறையில் வங்கிக்குப் பொறுப்புடையவராக இருப்பின் அப்பொழுது அத்தகைய விடயத்தில் அட்டை வைத்திருப்பவரின் கணக்கில் நிலுவையிலுள்ள மீதி முழுவதும் உடனடியாக வருமதியானதும் செலுத்தப்படல் வேண்டும் என்பதுடன் இங்கு வாசகம் 17 (முடிவுறுத்துதல்) என்பதன் ஏற்பாடுகள் ஏற்புடையனவாதலும் வேண்டும்.

11.17 உங்கள் அட்டைக் கணக்கிலுள்ள மீதியைக் குறிப்பிட்டு வங்கியின் அலுவலர் ஒருவரால் கைச்சாத்திடப்பட்ட சான்றிதல் ஒன்ற சான்றிதழின் திகதியன்று வங்கிக்கு நீங்கள் பொறுப்பாதலுக்கு முதற்தேற்றச் சான்றாதல் வேண்டும்.

11.18 எந்தவொரு பணவைப்பும் கடனட்டை கணக்கில் வரவு வைக்கப்பட்ட பின்னரே, அது வங்கியால் பெற்றுக்கொள்ளப்பட்டது என கருத்தில் கொள்ளப்படும்.

11.19 காசோலை வைப்பீடொன்று சேகரிப்பிற்கு ஏற்றுக்கொள்ளப்படும் காசோலை அனுமதிக்கப்பட்டு வருவாய்கள் வங்கியால் வங்கிக்குச் செலுத்தப்படும் வரை வருவாய்கள் கிடைக்கமாட்டா. எமது ATM பொறிகளிலும் காசோலை வைப்பீட்டுப் பெட்டிகளிலும் செய்யப்படும் காசோலை வைப்பீடுகள் அடுத்துவரும் வேலை நாளில் சேகரிக்கப்படும்.

11.20 வங்கிக்கு கிளையொன்று இல்லாத அமைவிடமொன்றில் வரையப்பட்ட காசோலைகள் மூலம் செய்யப்படும் கொடுப்பனவுகள் வங்கியால் காலத்துக்குக் காலம் தீர்மானிக்கப்பட்டவாறு செயல்முறைப்படுத்தும் கட்டணமொன்றுக்கும் கையாளும் கட்டணமொன்றுக்கும் அமைந்தனவாதல் வேண்டும்.

11.21 கொடுப்பனவு வருமதியான திகதியன்று அட்டைக் கணக்கிற்கு அட்டை வைத்திருப்பவரின் நிலுவையிலுள்ள கடன் அட்டை விலைப்பட்டியல் தொகையொன்றின் நூற்றுவீதமொன்றின் கொடுப்பனவைச் செய்வதற்கு வங்கியுடன் அட்டை வைத்திருப்பவரின் நடைமுறை அல்லது சேமிப்புக் கணக்கிற்கு அட்டை வைத்திருப்பவர் நேரடியான பற்றுக்கு நிலையில் அறிவுறுத்துதல் ஒன்றை அட்டை வைத்திருப்பவர் வழங்கலாம். அத்தகைய ஏதேனும் நிலையியல் அறிவுறுத்துதலுக்கான எவையெனும் திருத்தங்கள் அல்லது இல்லாதொழித்தல் குறைந்தபட்சம் கொடுப்பனவு வருமதியாகும் அடுத்த திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னராவது வங்கிக்கு வந்து சேரவேண்டும் என்பதற்கு அட்டை வைத்திருப்பவர் இத்தால் உடன்படுகின்றார்.

11.22 அட்டைக் கணக்கு தொடர்பில் அட்டை வைத்திருப்பவரால் வங்கிக்கு செலுத்தப்பட்ட கொடுப்பனவுகள் இந்த நியதி நிபந்தனைகளின் கீழ் வங்கியின் மட்டில் அட்டை வைத்திருப்பவரின் பொறுப்புகளின் கொடுப்பனவுகளுக்கு அல்லது அவை தொடர்பில் வங்கி காலத்துக்குக் காலம் பொருத்தமானதெனக் கருதும் அத்தகைய வரிசைக் கிரமத்தில் வங்கியால் பிரயோகிக்கப்படும்.

11.23 அலுவல்களின் சாதாரண நெறிமுறையில் கொடுப்பனவுகள் கணக்குக் கூற்றில் பதியப்பட்ட திகதியிலிருந்தல்லாமல், வங்கியால் உள்ளவாறாகவே பெறப்பட்ட திகதியிலிருந்து செய்யப்பட்டுள்ளதாகக் கருதப்படும். கொடுப்பனவு அட்டைக் கணக்கில் வரவு வைக்கப்படுவதற்கு குறைந்தபட்சம் 3 - 4 நாட்களாவது அனுமதிக்கப்படுதல் வேண்டும்.

11.24 அட்டை வைத்திருப்பவரால் செய்யப்படும் எல்லாக் கொடுப்பனவகளும் அட்டைக் கணக்கின் விலைப்பட்டியலிடும் நாணயத்தில் இருத்தல் வேண்டும். கொடுப்பனவு வேறு ஏதேனும் நாணயத்தில் செய்யப்படின் அத்தகைய கொடுப்பனவுகளை விலைப்பட்டியலிடும் நாணயத்திற்கு மாற்றுவதில் வங்கியால் அறவிடப்பட்ட அல்லது உறப்பட்ட எல்லா செலாவணித் தரகுகளையும் வேறு அறவீடுகளையும் அல்லது இழப்புகளையும் அட்டை வைத்திருப்பவர் வங்கிக்குச் செலுத்துதல் வேண்டும். அத்தகைய மாற்றம் அட்டைக் கணக்கில் பதிவு செய்யப்படும் திகதியன்று வங்கியால் தீர்க்கமாகத் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய செலாவணி வீதப்படி பயனுறுத்தப்படுதல் வேண்டும். அட்டை வைத்திருப்பவரால் அட்டைக் கணக்கின் விலைப்பட்டியலிடும் நாணயத்தில் செய்யப்படும் ஏதேனும் கொடுப்பனவு வங்கி நிதியை அட்டைக் கணக்கில் பதியும் திகதியன்றே அட்டைக் கணக்கில் வரவு வைக்கப்படும். கொடுப்பனவு விலைப்பட்டியலிடும் நாணயத்தில் அல்லாமல் வேறு ஏதேனம் நாணயத்தில் பெறப்படுமிடத்து அத்தகைய கொடுப்பனவு விலைப்பட்டியலிடும் நாணயத்திற்கு மாற்றப்பட்ட திகதியின் பின்னரே அல்லது அதன் பெறுமதிக்கு வங்கியால் இயைபான நிதி கிடைக்கப்பெற்று கடன் அட்டையில் பதிவு செய்யப்படும்போதே அத்தகைய கொடுப்பனவு வரவு வைக்கப்படும்.

11.25 கணக்குக் கூற்று கிடைக்கப் பெறாமை வருமதிகளை உரிய நேரத்தில் செலுத்தியமைக்குப்போதிய காரணமாகும் என அட்டை வைத்திருப்பவரால் கருதப்படுதலாகாது. எதிர்பாராத காரணங்களினால் அல்லது வங்கியின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட காரணங்களினால் கணக்குக் கூற்று கிடைக்கப் பெறாமைக்கு வங்கி பொறுப்பாளியாக்கப்படுதலாகாது.

11.26 அட்டை வைத்திருப்பவர் பயணம் செய்வாராயின் அல்லது நகருக்கு வெளியில் இருப்பாராயின் ஆகக்குறைந்த வருமதியான குறைந்தபட்சத் தொகையாவது கொடுப்பனவு வருமதியான திகதியன்று அல்லது அதற்கு முன்னர் செலுத்தப்படுவதை உறுதிப்படுத்துவதற்கு அட்டை வைத்திருப்பவர் ஒழுங்குகள் செய்தல் வேண்டும்.

11.27 அங்கத்துவத் தாபனத்திடமிருந்து முறையாக வழங்கப்பட்ட வரவு உறுதிச்சீட்டொன்று கிடைக்கப்பெற்றதன் மீது மாத்திரமே ஏதேனும் மீளளிப்புத் தொகையை அட்டை வைத்திருப்பவரின் அட்டைக் கணக்கில் வரவு வைக்கும்.

11.28 ஏதேனும் கணக்குக் கூற்று தொடர்பில் அட்டை வைத்திருப்பவரால் செய்யப்பட்ட ஏதேனும் பணத்தொகையின் கொடுப்பனவானது கணக்குக் கூற்றில் காட்டப்பட்ட பதிவுகளை அட்டை வைத்திருப்பவர் ஏற்றுக்கொண்டுள்ளார் என்பதற்கு பிணிக்கின்றதும் முடிவானதுமான சான்றாக அமைதல் வேண்டும்.

மேலே நிரப்படுத்தப்படாதவையும் அட்டைக்கு ஏற்புடைத்தானவையுமான நிதி அறவீடுகளையும் ஏனைய அறவீடுகளையும் அட்டையின் பயன்பாட்டையும் பற்றிய மேலதிக விவரங்களை வேண்டுகோளின்பேரில் அட்டைச் சேவைகள் நிலையத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

12. நியதிச்சட்ட ஒழுங்கு விதிகள்

12.1 அட்டையைப் பயன்படுத்துவதன் மூலம் பயனுறுத்தப்படக்கூடியவையும் இலங்கை மத்திய வங்கியால் அல்லது அதனையொத்த ஒழுங்குபடுத்தும் அதிகாரசபையால் காலத்துக்குக் காலம் வழங்கப்படும் எல்லா ஒழுங்கு விதிகளுடனும் இணங்கியொழுகுவதற்கும் அவ்வாறு இணங்கியொழுகாமையின் அல்லது வலுவிலுள்ள எவையேனும் அத்தகைய ஒழுங்கு விதியின் மீறுகையின் விளைவாக வங்கியால் உறப்பட்ட ஏதேனும் நட்டத்திற்கு, உரிமைக்கோரிக்கைக்கு அல்லது செலவுக்கு எதிராக நட்டோத்தரவாதம் செய்வதற்கும் அட்டை வைத்திருப்பவர் உடன்படுகின்றார்.

12.2 அட்டை வைத்திருப்பவர் மூலதனக் கொடுக்கல் வாங்கல்களுக்கும் வர்த்தக ரீதியிலான தொகைகளில் பாவனையாளர் பொருட்களைக் கொள்வனவு/இறக்குமதி செய்வதற்கும் அட்டையைப் பயன்படுத்துதலாகாது.

12.3 இந்த அட்டையின் பாவனை இலத்திரனியல் நிதிக் கைமாற்றத்தை (EFT) அல்லது ATM பொறியிலிருந்து வெளிநாட்டு செலாவணியிலிருந்து மீளப் பெறுதலை அவசியப்படுத்தும்பட்சத்தில் அது செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்தால் காலத்துக்குக் காலம் வழங்கப்படும் ஒழுங்கு விதிகளுக்கு அமைந்ததாகும் என்பதுடன் அது அதிகாரமளிக்கப்பட்ட நோக்கங்களுக்காக மட்டுமேயாகும்.

12.4 அட்டை வைத்திருப்பவர் வேறு நாட்டிற்குச் செல்லும் பட்சத்தில வெளிநாட்டுத் தொழில் வசதிக்காக இலங்கையை விட்டு கடல்கடந்த நாட்டிற்குச் செல்லும் பட்சத்தில் அல்லது காலத்துக்குக் காலம் வலுவிலிருக்கும் செலாவணிக் கட்டுப்பாட்டு ஒழுங்குவிதிகளின் வரைவிலக்கணத்தின்படி "வதிவற்றவர்" எனக் கருதப்படும் பட்சத்தில் அட்டை வைத்திருப்பவர் அட்டையை/(அட்டைகளை) வங்கிக்கு ஒப்படைத்தல் வேண்டும்.

12.5 வங்கி காலத்துக்குக் காலம் விதித்துரைக்கப்பட்டவாறு செலாவணிக் கட்டுப்பாட்டதிகாரியின் அல்லது வேறு ஏதேனும் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபைகளின் தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகும் என்பதுடன் வலுவிலிருக்கும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் விதிகளினதும் ஒழுங்கு விதிகளினதும் கீழ் இயைபான அதிகாரிகளுக்கு அத்தகைய கொடுக்கல் வாங்கல்களை வெளிவிடும்.

12.6 அவ்வாறு இல்லாதொழிக்கப்படும் நேரத்தில் வலுவிலுள்ள செலாவணிக் கட்டுப்பாட்டு ஒழுங்குவிதிகள் அல்லது வேறு ஏதேனும் நியதிச்சட்ட ஒழுங்கு விதிகள் மீறப்பட்டுள்ளன என நம்புவதற்கு வங்கிக்கு எத்தன்மையதுமான ஏதேனும் காரணம் இருக்கும் பட்சத்தில் வங்கி அதன் சொந்த விருப்பத்தின்படி அட்டை வைத்திருப்பவருக்கு அறிவித்தல் எதுவுமின்றி அட்டையை இல்லாதொழிக்கலாம்.

13. மீட்டுப்பெறுதல்

வங்கி ஏதேனும் நேரத்தில் அறிவித்தல் அல்லது பொறுப்பு எதுவுமின்றி அட்டைக் கணக்கின்மீது வருமதியான பணத்தொகையை விடுவிப்பதற்கு அட்டை வைத்திருப்பவரின் வங்கியுடனான ஏதேனும் கணக்கில் வரவிலிருக்கும் எவையேனும் பணத்தொகைகளை எதிரீடு செய்யலாம் அல்லது கைமாற்றலாம்.

14. அட்டையின் செல்லுபடியான தன்மையும் முடிவுறுத்துதலும் புதுப்பித்தலும்

14.1 அனைத்து அட்டைகளும் வழமையாக ஓராண்டு செல்லுபடியாகும் காலப்பகுதிக்கு வழங்கப்படும். வங்கி அதன் தற்றுணிபின்படி ஓராண்டை விஞ்சிய காலப்பகுதிக்கு செல்லுபடியாகும் அட்டைகளை வழங்கலாம். அட்டையின் செல்லுபடியாகும் காலப்பகுதி உங்கள் அட்டையில் காணப்படும் முடிவுறும் திகதியன்று முடிவுறும்.

14.2 நியதி நிபந்தனைகளின் மீறுகையில் இருந்தாலன்றி, வழமையாக உங்கள் நடைமுறை அட்டை முடிவுறுவதற்கு 15 நாட்களுக்கு முன்னர் உங்கள் அட்டையின் (அத்துடன் உங்கள் குறைநிரப்பு/மேலதிக அட்டை வைத்திருப்பவரினதும் அட்டைகளின்) செல்லுபடியாகும் தன்மையை வங்கி தானாகவே புதுப்பித்து உங்களுக்கு புது அட்டையொன்றை (அட்டைகளை) அனுப்பும். விதித்துரைக்கப்பட்ட காலப்பகுதிக்குள் உங்கள் புதுப்பிக்கப்பட்ட அட்டை(கள்) கிடைக்காதபட்சத்தில் தயவுசெய்து வங்கியின் அட்டை சேவைகள் பிரிவுகளுடன் தொடர்புகொள்ளவும்.

14.3 ஒரு மாதத்திற்கு அல்லது அதற்கு மேல் ஏதேனும் கொடுப்பனவை நிலுவையில் கொண்டிராத அனைத்து அட்டைகளும் தானாகவே புதுப்பிக்கப்படும். அட்டை வைத்திருக்கும் ஒருவர் தமது அட்டையை புதுப்பிக்க விரும்பாத அல்லது தமது குறைநிரப்பு அட்டையை புதுப்பிக்க விரும்பாதபட்சத்தில் இரண்டு மாதங்களுக்கு முன்னர் அட்டை சேவைகள் நிலையத்திற்கு எழுத்திலான அறிவித்தல் ஒன்று அனுப்பப்படுதல் வேண்டும். இரண்டு மாதங்களுக்கு முன்னர் அல்லது முடிவுறுவதற்கு 30 நாட்களுக்கு முன்னர் அனுப்பப்படும் அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. இது இல்லாதவிடத்து புதுப்பித்தல் கட்டணம் (புதுப்பித்தலின்போது ஏற்புடைத்தானவாறு) அறவிடப்படும் என்பதுடன் இது மீளளிக்கப்படவும் மாட்டாது.

14.4 அட்டை வைத்திருப்பவர் அவரது அட்டையை செல்லுபடியாகும் காலப்பகுதிக்கு அப்பால் பயன்படுத்த முயலச் கூடாது. அட்டையை அதன் செல்லுபடியாகும் காலப்பகுதிக்கு அப்பால் பயன்படுத்த முயல்வதால் எழும் எவையேனும் விளைவுகளுக்கு எத்தன்மையதுமான ஏதேனும் முறையில் வங்கி பொறுப்பாளியாக மாட்டாது.

15. வணிகர்களுடன் அட்டை வைத்திருப்பவரின் பிணக்குகள்

15.1 ஏதேனும் வர்த்தக நிறுவனத்துடன்/நிதி நிறுவனத்துடன் அட்டை வைத்திருப்பவருக்கு ஏற்படும் எந்தவொரு பிணக்கையும் அவர் நேரடியாக வர்த்தக நிறுவனத்துடன்/நிதி நிறுவனத்துடன் தீர்த்துக்கொள்ள வேண்டும். ஏதேனும் வர்த்தக நிறுவனத்திடமிருந்து/நிதி நிறுவனத்திடமிருந்து நீங்கள் அல்லது குறைநிரப்பு/மேலதிக் அட்டை வைத்திருப்பவர் பெற்றுக்கொள்ளும் எவையேனும் பொருட்களின் அல்லது சேவைகளின் தரத்திற்கு அல்லது பெறுமதிக்கு ஏதேனும் முறையில் வங்கி பொறுப்பாளியாகமாட்டாது.

16. பிணக்குகளும் தீர்வுகளும்

16.1 கணக்குக் கூற்றில் தவறு ஒன்று இடம்பெற்றிருப்பதாக நீங்கள் நம்பினால் உடனடியாக வங்கியுடன் தொடர்பு கொள்ளவேண்டும். (குறைந்தபட்சம் கணக்குக் கூற்று திகதியிலிருந்து 30 தினங்களுக்குள்) வங்கியின் விசாரணைகளுக்கு உதவும் வகையில் பெயர், அட்டை இலக்கம், பிரச்சினைக்குரிய கொடுக்கல் வாங்கல் பற்றிய விபரங்கள், சந்தேகிக்கும் அத்தகைய தவறுடன் சம்பந்தப்பட்ட தொகை ஆகிய விபரங்களை வங்கிக்கு வழங்க வேண்டும்.

16.2 அட்டை வைத்திருப்பவர் வங்கிக்கு வாய்மொழி மூலம் இதனை அறிவித்தால் ஐந்து (5) வேலை தினங்களுக்குள் தமது முறையீட்டை எழுத்து மூலம் அனுப்புமாறு அட்டை வைத்திருப்பவர் வேண்டப்படுகின்றார். வங்கிக்கு மேலதிகத் தகவல்கள் எதுவும் தேவைப்படும் பட்சத்தில் வங்கி அட்டை வைத்திருப்பவருடன் தொடர்புகொள்ளும்.

16.3 வங்கியின் புலனாய்வும் திருத்த நடவடிக்கையும் (எதுவுமிருப்பின்) முடிவுறாதிருக்கும்போது வங்கி தனது ஏக தற்றுணிபின் பேரில் பிணக்கு தீர்க்கப்படும்வரை பிரச்சினைக்குரிய அந்த தொகையை உங்களது கணக்கில் வரவு வைக்கும். விசாரணைகள் முடிவுற்ற பின்னர் வங்கி பிழைகள் எதுவும் இடம்பெறவில்லை என்ற முடிவுக்கு வருமிடத்து அதற்கிணங்க அட்டை வைத்திருப்பவருக்கு உடனடியாக அறிவிக்கப்படும். பிணக்குடன் சம்பந்தப்பட்ட தொகை அட்டை வைத்திருப்பவரின் கணக்கில் பெறுமதி திகதியுடன் பற்று வைக்கப்படும். அத்துடன், அதற்கிணங்க பெறுமதி சேவைக் கட்டணங்களும் திரளும். அட்டை வைத்திருப்பவரின் பிணக்கை விசாரிக்கும் செயல்முறையின்போது அதன் சுவடிக்கூடங்களிலிருந்து அல்லது வேறொரு வங்கி ஊடாக உறுதிச்சீட்டுக்களின் பிரதிகள் முதலியவற்றை வங்கி மீட்டுப்பெற வேண்டியிருந்திருந்தால் உரியவாறு மீட்டுப்பெறும் கட்டணங்களுக்கு உங்கள் கணக்கில் பற்று வைக்கப்படும்.

17. முடிவுறுத்தல்

17.1 மேலேயுள்ள 11ஆவது வாசகத்தில் **(கொடுப்பனவும் கட்டணங்களும்)** குறிப்பிடப்பட்ட கொடுப்பனவு சம்பந்தமான ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும் அட்டைக் கணக்கொன்றில் நிலுவையிலுள்ள எல்லா தொகைகளும் (எல்லா குறைநிரப்பு அட்டைகளிலும் உள்ளவை உட்பட) அட்டையைப் பயன்படுத்தி உறப்பட்டதும் அட்டை வைத்திருப்பவரின் கணக்கிற்கு இன்னமும் அறவிடப்படாதிருப்பதுமான தொகை உட்பட இந்த உடன்படிக்கை முடிவுறுத்தப்படுவதன் மீது வருமதியாகும் என்பதுடன் உடனடியாகவும் முழுமையாகவும் செலுத்தப்படல் வேண்டும். இந்த உடன்படிக்கையின் முடிவுறுத்துதலானது அட்டை வைத்திருப்பவரால் அட்டையை இரு பாதிகளாக வெட்டி அதனுடன் சேர்த்து வங்கிக்கு எழுத்திலான அறிவித்தல் கொடுப்பதன் மூலம் அல்லது வங்கியால் அட்டை வைத்திருப்பவரின் இறப்பின் மீது, வங்கி முறிந்த தன்மையின்

மீது அல்லது கடனிறுக்க வகையற்ற தன்மையின் மீது அல்லது வங்கிக்கு ஏற்றிக்கூறப்படல் வேண்டுமென ஏதேனும் ஏதுவினால் அட்டை வைத்திருப்பவர் இருக்குமிடம் வங்கிக்குத் தெரியாதிருக்கும்போது இடம் பெறும். அட்டைக் கணக்கில் நிலுவையாயிருக்கும் மீதிகள் எவற்றையும் முழுமையாக மீளச் செலுத்துவதற்கு அட்டை வைத்திருப்பவரினதும் அத்துடன்/அல்லது அவரது மரணச் சொத்துக்களினதும் பொறுப்பாதல் வேண்டும். அத்தகைய நிலுவையை மீட்டுப் பெறுவதிலான எல்லாச் செலவுகளுக்கும் (சட்டக் கட்டணங்கள் மற்றும் அறவீடுகள் உட்பட) செலவினங்களுக்கும் வங்கியை நட்டோத்தரவாதம் செய்துவைத்தல் வேண்டும். அத்தகைய மீள்கொடுப்பனவு செலுத்தப்படாதிருக்கையில் அப்போதைய வீதங்களின்படி நிதி மற்றும் ஏனைய அறவீடுகளை தொடர்ந்து அறவிடுவதற்கு வங்கி உரித்துடையதாதல் வேண்டும்.

17.2 முதனிலை அட்டை வைத்திருப்பவர் அவரது அட்டையை முடிவுறுத்தும் பட்சத்தில் எல்லா நிலுவைகளும் செலுத்தித் தீர்க்கப்பட்டு எல்லா அட்டைகளும் முறையாக இரு பாதிகளாக வெட்டி வங்கிக்குத் திருப்பிக் கொடுக்கப்படும் வரை இந்த நியதி நிபந்தனைகளுக்கிணங்க எல்லா அறவீடுகளுக்கும் ஏனைய பொறுப்புகளுக்கும் குறைநிரப்பு அட்டை வைத்திருப்பவர்/களும் ஒருமித்தும் தனித்தனியாகவும் பொறுப்புடையடவர்களாதல் வேண்டும்.

17.3 முன்னறிவித்தலுடனோ அல்லது முன்னறிவித்தல் இன்றியோ, காரணத்துடனோ காரணமின்றியோ கடன் அட்டையை இல்லாதொழிப்பதன் மூலம் அல்லது அட்டையை புதுப்பிக்க மறுப்பதன் மூலம் வங்கி இந்த உடன்படிக்கையை ஏதேனும் நேரத்தில் முடிவுறுத்தலாம். அத்தகைய முடிவுறுத்துதல் இடம்பெற்றாலன்றியும் இடம்பெறும் வரையிலும் வங்கி அட்டை வைத்திருப்பவருக்கு காலத்துக்குக் காலம் புதிய அட்டையொன்றை (புதுப்பித்தல்) வழங்கலாம்.

17.4 அட்டை கணக்கு முடிவுறுத்தப்படும் பட்சத்தில் வருடாந்த அங்கத்துவக் கட்டணத்தை அல்லது அதன் ஏதேனும் பகுதியை மீளச்செலுத்துவதற்கு வங்கி பொறுப்புடையதாக மாட்டாது.

17.5 அட்டை வழங்கப்படுவதற்கு வங்கியால் இணைந்த பிணை எதுவும் வைத்திருக்கப்படும் பட்சத்தில் அட்டையை வைத்திருப்பவரால் அட்டை இல்லாதொழிக்கப்படினும் சரி வங்கியால் இல்லாதொழிக்கப்படினும் சரி அல்லது வங்கியால் முடிவுறுத்தப்பட்டதையடுத்து அட்டை இல்லாதொழிக்கப்பட்டு வங்கிக்கு திருப்பிக்கொடுக்கப்பட்டதையடுத்து நிலுவைகள் முற்றாக செலுத்தித் தீர்க்கப்பட்டாலும் கூட குறைந்தபட்சம் 45 நாட்களுக்கு அத்தகைய பிணையை பிடித்து வைத்திருக்கும் உரிமை வங்கிக்கு உண்டு.

17.6 எந்தவொரு திறத்தவராலும் உடன்படிக்கை முடிவுறுத்தப்பட்ட போதும் கடன் அட்டையை பாவித்தமைக்கான மேலும் வேறு எல்லாக் கட்டணங்களையும் செலுத்துவதற்கு அட்டை வைத்திருப்பவர் பொறுப்புடையவராதல் வேண்டும்.

18. பொறுப்பிலிருந்து நீங்குதல்

பின்வருவனவற்றின் காரணமாக நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ அட்டை வைத்திருப்பவருக்கு ஏற்படும் இழப்பு அல்லது சேதம் தொடர்பில் எந்தவித பொறுப்பையும் வங்கி ஏற்றுக்கொள்ளமாட்டாது.

18.1 வங்கி அல்லது வணிகர் அல்லது வேறு வங்கி அல்லது நிதி நிறுவனம் அல்லது ஏதாவது ATM அல்லது வேறு திறத்தவர் எவரும் அட்டை கொடுக்கல் வாங்கல்களை ஏற்க மறுப்பதனால் அல்லது கடன் வரையறைவரை பண முற்கொடுப்பனவுகளை நீடிக்க அல்லது செலுத்த மறுப்பதால் கடன் அட்டை வைத்திருப்பவருக்கு எத்தன்மையைதாகவும் உறப்படும் அல்லது ஏற்படும் இழப்புக்கள் அல்லது சேதங்கள்.

18.2 வணிகர் அல்லது அங்கத்துவ நிறுவனம் அல்லது ஏதேனும் கொடுப்பனவு ஒழுங்கமைப்பு அட்டையை அங்கீகரிக்க அல்லது ஏற்க மறுத்தல், வணிகர் ஒருவரால் கடன் அட்டை வைத்திருப்பவருக்கு வழங்கப்படும் பொருட்களில் அல்லது சேவைகளில் இருக்கக்கூடிய குறைபாடு அல்லது பற்றாக்குறை அல்லது ஏற்புடைத்தாகுமிடத்து கடன் அட்டை கொடுக்கல் வாங்கல்களை வணிகரின் ஏதேனும் மீறுகை அல்லது நிறைவேற்றப்படாமை.

18.3 ஏதாவது ATM / POS பொறியில் குறைபாடான செயற்பாடு அத்துடன்/அல்லது தொடர்பாடல் முறையில் ஏற்பட்ட தடங்கல்.

18.4 அட்டையின் மீது புடைப்புருவில் பொறிக்கப்பட்டுள்ள முடிவுறும் திகதிக்கு முன்னர் அட்டையைக் கோரி ஒப்படைக்கப் பெறுவதற்கான அதன் உரிமையை வங்கி பிரயோகித்தல். அத்தகைய கோரிக்கை அல்லது ஒப்படைக்கக் கோரல் வங்கியால் செய்யப்பட்டிருப்பினும் சரி வேறு எவரேனும் ஆளினால் அல்லது ATM / POS பொறியினால் செய்யப்பட்டிருப்பினும் சரி.

18.5 வாசகம் 17ஐப் பின்பற்றி (முடிவுறுத்துதல்) அட்டையையோ அல்லது கடன் அட்டை கணக்கையோ முடிவுறுத்தும் வங்கியின் உரிமையை அது பிரயோகித்தல்.

18.6 அட்டையை மீள் உடைமை கொள்ளுகையில் அல்லது அதனை திருப்பித் தருமாறு விடுக்கப்படும் ஏதேனும் வேண்டுகோள் அல்லது எவரேனும் ஆள் அட்டையை அங்கீகரிக்க அல்லது ஏற்றுக்கொள்ள மறுப்புத் தெரிவிக்கையில் அல்லது அது தொடர்பில் அட்டை வைத்திருப்பவரின் கடன் பெறும் சிறப்பியல்புக்கும் நன்மதிப்பிற்கும் ஏற்படும் ஏதாவது ஊறு.

18.7 வாசகம் 20ஐப் பின்பற்றி (வங்கியின் புத்தகம், பதிவேடுகள் மற்றும் வாடிக்கையாளர் பற்றிய தகவல்) வங்கியால் வெளிவிடப்படும் எவையேனும் விவரங்களில் ஏதேனும் பிறழ்கூற்று, பிழையான விளக்கவுரை, தவறு அல்லது விட்டுவிடுகை.

18.8 அட்டை வைத்திருப்பவருக்கும் வணிகர், வங்கி, நிதி நிறுவனம் அல்லது வேறு எவரேனும் ஆள் ஆகியோருக்கும் இடையில் ஏற்படும் பிணக்கானது, அட்டை வைத்திருப்பவர் அத்தகைய வணிகர் அல்லது வங்கி, நிதி நிறுவனம் அல்லது வேறு எவரேனும் ஆளுக்கு எதிராகக் கொண்டிருக்கக்கூடிய பிணக்கு அல்லது எதிர்கோரிக்கை அல்லது எதிரீடு செய்யும் உரிமை என்பன எவ்விதத்திலேனும் கடன் அட்டை வைத்திருப்பவர் வங்கி மீது கொண்டுள்ள பொறுப்புக்களில் பாதிப்பை ஏற்படுத்தாது.

18.9 தெய்வச் செயல், குடியியல் கொந்தளிப்பு, கிளர்ச்சி, போர் அல்லது வங்கியின் கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட ஏதுக்கள் அல்லது ஏதேனும் வேலைநிறுத்தம் அல்லது கதவடைப்பு மூலமாக அதன் அலுவல்களில் ஏற்படும் தடங்களினால் ஏற்படும் விளைவுகள்.

19. கூட்டிணைக்கப்பட்ட அட்டைகளின் பொறுப்பு

தகுதிவாய்ந்த கூட்டிணைக்கப்பட்ட குழுமங்களின் பணியாள் தொகுதியினர், நிறைவேற்ற அலுவலர்கள், பணிப்பாளர்கள் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழமத்தால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் வேறு ஆட்கள் தொடர்பில் வழங்கப்பட்ட எல்லா அட்டைகளும் கூட்டிணைக்கப்படட குழுவினதும் அட்டை வைத்திருப்பவரினதும் கூட்டானதும் தனித்தனியானதுமான பொறுப்புகளின் கீழ் தொழிற்படும்.

20. வங்கியின் புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் வாடிக்கையாளர் தகவல்கள்

20.1 வங்கியின் புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் கணக்குகள் என்பன முடிவானவையும், பிணிக்கின்றவையாதலும் வேண்டும். வங்கியால் வழங்கப்பட்ட ஏதேனும் சான்றிதழ், அச்சுப்படி (Printout) அல்லது கணக்குக் கூற்று என்பன எவையேனும் வழக்கு நடவடிக்கைகளில் அல்லது வேறு வகையில் அவற்றின் செம்மை அட்டை வைத்திருப்பவருக்கெதிராக இறுதியானதும் தீர்க்கமானதுமான சான்றாதல் வேண்டும்.

20.2 வாடிக்கையாளரதும் வங்கியினதும் நலனை பாதுகாப்பதற்காக வங்கியால் எடுக்கப்படும் அல்லது வங்கிக்கு எடுக்கப்படும் தொலைபேசி அழைப்புக்கள் பதிவுசெய்யப்படுவதை வாடிக்கையாளர் அங்கீகரித்து ஏற்றுக்கொள்கிறார்.

20.3 வங்கியானது, அதன் தரவுகள், தகவல்கள் மற்றும் பதிவேடுகள் என்பவற்றை இலத்திரனியல் வடிவில் அல்லது மைக்குரோ படச்சுருளில் அல்லது வேறு முறைகளில் (இலங்கைக்கு வெளியே உள்ள செயல்முறை மையங்கள் மற்றும் தரவு மையங்கள் உட்பட) பேணலாம், செயன்முறைக்குட்படுத்தலாம், அத்துடன் தேக்கி வைக்கலாம் என்பதனையும் அதன் கோவைகள், புத்தகங்கள், பதிவுகள் அல்லது கணக்குகள் என்பவற்றில் இருந்து பிரித்தெடுப்பொன்றாக வங்கி வெளிக்காட்டி வைக்கக்கூடிய செய்திகள், கேபிள்கள், ரெலெக்ஸ்கள், தொலைநகல்கள், மைக்குரோ படச்சுருள்கள், ஒலிப்பதிவு நாடாக்கள், கணனி அச்சுப்படிகள் மற்றும் புகைப்படப் பிரதிகள் என்பன அவற்றின் உள்ளடக்கங்களின் உண்மைத் தன்மைக்கு தீர்க்கமான சான்றாக அமையும் என்பதனையும் அட்டை வைத்திருப்பவர் அங்கீகரித்து ஏற்றுக்கொள்கின்றார்.

20.4 வங்கியானது, மூன்றாம் திறத்தவரான ஒப்பந்தக்காரர்களினது சேவைகளைப் பயன்படுத்தலாம் என்பதுடன் அத்தகைய மூன்றாம் திறத்தவர், வாடிக்கையாளர் மற்றும் அவரது கணக்கு தொடர்பான விபரங்கள் உட்பட வங்கியின் புத்தகங்களுக்கும் பதிவேடுகளுக்கும் அணுக்கம் பெறலாம் என்பதனையும் அட்டை வைத்திருப்பவர் அங்கீகரித்து ஏற்றுக்கொள்கின்றார்.

20.5 வங்கியுடன் வாடிக்கையாளரின் உறவு பற்றிய விவரங்களை (நிலுவையிலுள்ள மீதி, கணக்கு வரலாறு, அட்டை வைத்திருப்பவர் தொடர்பாக வேறு தகவல் என்பன உட்பட) வங்கியின் வேறு ஏதேனும் கிளைக்கு அல்லது அலுவலகத்திற்கு வங்கியுடன் இணைந்த அமைப்பிற்கும் அல்லது வங்கியின் எவரேனும் உறுப்பினருக்கும் இலங்கையிலாயினும் சரி வேறேங்கேயாயினும் சரி நீதிமன்றத்தினதும் கட்டளையுடன் இணங்கியொழுகுவதற்கும் வேறு ஒழுங்குபடுத்தும் அதிகார சபைக்கும் வங்கியின் வாய்ப்புள்ள எவரேனும் சாட்டுதல் பெறுநருக்கும் எவரேனும் உத்தரவாதமளிப்பவருக்கும் குறிப்பறிக்கையொன்றுக்காக மூன்றாம் திறத்தவர் ஒருவரிடமிருந்து வேண்டுகோள் ஒன்றுக்கு மறுமொழியாக மூன்றாம் திறத்தவருக்கும் அல்லது பாதுகாப்பு வழங்குபவருக்கும் வங்கியின் உயர்தொழில்சார் மதியுரையாளர்களுக்கும் முகவர்களுக்கும் சுயேச்சை ஒப்பந்தக்காரர்களுக்கும் வெளிவிடுவதற்கும் அறிக்கையிடுவதற்கும் அட்டை வைத்திருப்பவர் சம்மதிக்கின்றார்.

20.6 வங்கி பொருத்தமானதெனக் கருதும் ஏதேனும் நேரத்தில் அவருக்கு அறிவித்தலின்றி அட்டைக்கான விண்ணப்பதாரரின் கடன் நிலைமையை அத்துடன்/அல்லது அட்டை வைத்திருப்பவரின் கடன் நிலைமையை பரிசீலனை செய்வதற்குமான உரிமை வங்கிக்கு உண்டு.

20.7 அட்டைக் கணக்குகள் தொடர்பாக, ஒரு வாடிக்கையாளர்/வாடிக்கையாளர்களின் தொழில், வங்கியுடன் அல்லது வேறு குழு உறுப்பினருடன் வைத்திருக்கப்படும் கணக்கு தொடர்பாக அல்லது வங்கியுடன் அல்லது வேறொரு குழு உறுப்பினருடன் வாடிக்கையாளரின்/வாடிக்கையாளர்களின் உறவு என்பன உட்பட (வரையறையின்றி) ஏதேனம் நோக்கத்திற்காக பின்வருவனவற்றிற்கு வெளிவிடும் உரிமை வங்கிக்கு (அத்துடன்/அல்லது அதன் எவரேனும் அலுவலர்களுக்கு/ஊழியர்களுக்கு) உண்டு:

20.7.1 வங்கியின் ஏதேனும் கிளைக்கு அல்லது வேறொரு குழு உறுப்பினருக்கு

20.7.2 வங்கியின் மீது அல்லது வேறொரு குழு உறுப்பினர் மீது நியாயாதிக்கும் கொண்டுள்ள ஏதேனும் ஒழுங்குபடுத்தும், மேற்பார்வை செய்யும் அரசாங்க அதிகார சபைக்கு

20.7.3 எந்த ஆளுக்கு அத்தகைய வெளிவிடுகையை செய்வதற்கு சட்டத்தால் அல்லது நீதிமன்றக் கட்டளையால் தேவைப்படுத்தப்படுகின்றதோ அல்லது அதிகாரமளிக்கப்படுகின்றதோ அந்த எவரேனும் ஆளுக்கு

20.7.4 வங்கிக்கு அந்தரங்கத்தன்மையினதான கடமையின் கீழுள்ள எவரேனும் ஆளுக்கு

21. தொலைபேசி, டெலக்ஸ், கேபிள் தொலைநகல் மற்றும் மின்னஞ்சல் அறிவுறுத்துதலுக்கான அதிகாரமளிப்பும் நட்டோத்திரவாதமும்.

21.1 வங்கியால் விசாரித்தல் எதுவுமின்றி அறிவுறுத்துதலை வழங்கும் அல்லது வழங்கியதாகக் கருதப்படும் ஆளின் அதிகாரம் அல்லது அடையாளம் தொடர்பாக முற்போந்தமையின் பொதுமைக்குப் பங்கமின்றியும் அறிவுறுத்துதல் கிடைக்கப்பெறும் நேரத்தில் நிலவிய சூழ்நிலைகளைப் பொருட்படுத்தாமலும் கடன் அட்டை வைத்திருப்பவர் அவர் சார்பில் தொலைபேசி, டெலெக்ஸ், கேபிள் தொலைநகல் மற்றும் மின்னஞ்சல் மூலமாக வங்கிக்கு காலத்துக்குக் காலம் வழங்கும் அல்லது வழங்கியதாகக் கருதப்படும் அறிவித்தல், தகவல்கள், கோரிக்கை, வேறு தொடர்பாடல்கள் (‘அறிவுறுத்துதல்கள்’) என்பன மீது நம்பிக்கை வைத்து அதற்கிணங்க செயற்படுவதற்கு அட்டை வைத்திருப்பவர் வங்கிக்கு அதிகாரமளிக்கிறார். மின்னஞ்சல் மூலம் அறிவுறுத்துதல்கள் கிடைக்கப்பெற்ற நேரம் மற்றும் திகதி பற்றிய வங்கியின் விதிமுறை இறுதியானது என்பதனை அட்டை வைத்திருப்பவர் ஏற்றுக்கொள்வார்.

21.2 அறிவுறுத்துதல்கள் அட்டை வைத்திருப்பவரால் முற்றிலும் அதிகாரமளிக்கப் பட்டவையும் அவரைப் பிணிக்கின்றவையுமாகும் எனக் கருதுவதற்கு வங்கி உரித்துடையதாதல் வேண்டும் என்பதுடன் அறிவுறுத்துதல் பணம் செலுத்துவதற்காயினும் சரி அல்லது வேறுவகையில் ஏதேனும் கணக்கில் வரவு அல்லது பற்று வைப்பதற்காயினும் சரி, ஏதேனும் பணத்தின் அல்லது ஆவணங்களின் உடைமையகற்றுதல் தொடர்பிலானதாயினும் சரி அல்லது அட்டை வைத்திருப்பவரை அல்லது வேறு எவரேனும் ஆளை வங்கியுடனான ஏதேனும் உடன்படிக்கையுடன் அல்லது வேறு ஏற்பாட்டுடன் பிணிக்கின்றதாகக் கருதப்பட்டதாயினும் சரி கொடுக்கல் வாங்கலின் அல்லது ஏற்பாட்டின் தன்மையை அல்லது சம்பந்தப்பட்ட பணத்தின் தொகையைப் பொருட்படுத்தாமல் அறிவுறுத்துதலின் நியதிகளில் ஏதேனும் பிழை, கருத்து மயக்கம், கருத்துவேறு இருப்பது எவ்வாறிருப்பினும் எத்தன்மையதுமான ஏதேனும் கொடுக்கல் வாங்கலின் அல்லது ஏற்பாட்டின் வகைக்கு அட்டை வைத்திருப்பவரை கட்டுப்படுத்துவதற்குத் உரியதென வங்கி கருதக்கூடியவாறு அறிவுறுத்துதல்கள் தொடர்பில் நடவடிக்கை எடுப்பதற்கு அல்லது அதில் நம்பியிருப்பதற்கு வங்கி உரித்துடையதாதல் வேண்டும்.

21.3 இந்த அதிகாரமளிப்பின் மற்றும் நட்டோத்தரவாதத்தின் நியதிகளுக்கு அமைவாக வங்கி செயற்படுவதற்குக் கிரயமாக அறிவுறுத்துதல்களிலிருந்து அல்லது அது தொடர்பில் அல்லது மீறுகையால் அல்லது இதன் கண் ஏற்பாடு செய்யப்பட்டவாறு வங்கி அதன் உரிமையை வலுவுக்கிடுவதில் எழும் அனைத்து இழப்புக்கள், உரிமைக் கோரிக்கைகள், வழக்குகள், வழக்கு நடவடிக்கைகள், கேள்விகள், இழப்பீடுகள், செலவுகள், பொறுப்புக்கள், செலவினங்கள் இவை எத்தன்மையதாயிருப்பினும் சரி எவ்வாறு எழுந்ததாயினும் சரி அவற்றிற்கெதிராக அட்டை வைத்திருப்பவர் வங்கிக்கு நட்டோத்தரவாதம் செய்யவும் நட்டோத்தரவாதம் செய்து வைக்கவும் அழிக்க முடியாதவாறு பொறுப்பேற்கின்றார். அது தொடர்பிலான அத்தகைய எல்லா செலவுகளும் செலவினங்களும் அட்டைக் கணக்கில் பற்று வைக்கப்படலாம் என்பதுடன் அட்டை வைத்திருப்பவரால் செலுத்தப்படல் வேண்டும்.

21.4 அட்டை வைத்திருப்பவரிடமிருந்து முடிவுறுத்தும் அறிவித்தல் கிடைக்கப்பெற்று அதன் மீது செயற்படுவதற்கு போதுமான கால அவகாசம் இருந்தாலன்றியும் இருக்கும் வரையிலும் இந்த அதிகாரமளிப்பும் நட்டோத்தரவாதமும் முழு வலுவிலும் பயனுறுதியுடனுமிருத்தல் வேண்டும். ஆயினும் அத்தகைய அறிவித்தல் கிடைக்கப்பெறுவதற்கு முன்னர் இந்த அதிகாரமளிப்பினதும் நட்டோத்தரவாதத்தினதும் நியதிகளுக்கிணங்க நிறைவேற்றப்படும் ஏதேனும் செயல் தொடர்பில் இந்த அதிகாரமளிப்பினதும் நட்டோத்தரவாதத்தினதும் கீழ் ஏதேனும் பொறுப்பிலிருந்து அட்டை வைத்திருப்பவரை விடுவிக்க மாட்டாது.

21.5 மேற்கூறப்பட்டவாறு தொலைபேசி, டெலக்ஸ், கேபிள், தொலைநகல் அல்லது மின்னஞ்சல் மூலம் அறிவுறுத்துதலை வழங்குவது வங்கிக்கு அறிவுறுத்துதல்கள் வழங்குவதற்கான பாதுகாப்பான வழிமுறை அல்ல என்பதனையும் இது தொடர்பிலான எதிர்மறை விளைவுகளை அட்டை வைத்திருப்பவர் அறிந்திருக்கின்றார் என்பதனையும் அட்டை வைத்திருப்பவர் ஏற்று அங்கீகரிக்கின்றார் என்பதுடன் அட்டை வைத்திருப்பவரின் வசதிக்காக செய்யப்படும் இந்த ஏற்பாடு முற்றிலும் அட்டை வைத்திருப்பவரின் எதிர்மறை விளைவின் மீதேயாகும் என்பதனையும் உறுதிப்படுத்துகின்றார்.

22. எதிரீடு செய்வதற்கான உரிமையும் பிணை பொறுப்பாக வைக்கப்பட்டுள்ள நிதிகளும்

22.1 எதிரீடு செய்வதற்கான ஏதாவது பொது உரிமை அல்லது சட்டத்தால் அல்லது வேறு ஏதாவது உடன்படிக்கையால் வழங்கப்பட்ட வேறு உரிமைகள் என்பவற்றுக்கு மேலதிமாக வங்கியானது, எந்தவித முன்னறிவித்தலும் இன்றி எந்தவொரு வேளையிலும், கடன் அட்டை வைத்திருப்பவரால் தனியாகவோ, கூட்டாகவோ பேணப்படும் அனைத்து அல்லது ஏதாவது கணக்குகள் எந்த வகையிலும், எங்கு இருப்பினும் இவை இலங்கை நாணயத்தில் அல்லது வேறு எந்த நாணயத்தில் பேணப்படினும் அவற்றை ஒன்று சேர்க்கவும் அல்லது திரட்டவும் அல்லது எதிரீடு செய்யவும் அல்லது குறைநிரப்பு கடன் அட்டை வைத்திருப்பவருடன் கூட்டாகப் பேணும் கணக்குகள் உள்ளிட்ட கணக்குகளில் இருக்கும் எந்தவொரு தொகையையும் கடன் அட்டை வைத்திருப்பவர் கணக்கில் வங்கிக்கு நிலுவையாகவுள்ள தொகையைச் செலுத்துவதற்காக மாற்றுவதற்கு வங்கிக்கு முடியும் என்பதை கடன் அட்டை வைத்திருப்பவர் ஏற்றுக்கொள்கின்றார். கடன் அட்டை வைத்திருப்பவர் இலங்கை நாணயத்திலோ அல்லது வேறு எந்த நாணய அலகிலோ பேணும் எந்தக் கணக்கிலும் நிலுவையாக இருக்கக்கூடிய தொகையாக இருந்தாலும் சரி. வங்கி தனது தற்றுணிபின் பேரில் தீர்மானிக்கும் வங்கியின் நடைமுறை செலாவணி வீதங்களுக்கு அமைவாக அத்தகைய ஒன்றிணைப்பை, திரட்டலை, எதிரீடு செய்தலை அல்லது மாற்றுதலை வங்கி மேற்கொள்வதற்கு கடன் அட்டை வைத்திருப்பவர் அதிகாரமளிக்கிறார்.

22.2 பேராணை அல்லது அழைப்பாணை பிறப்பிக்கப்பட்டதும் அல்லது கடன் அட்டை வைத்திருப்பவர் வங்கிமுறிந்த அல்லது கடனிறுக்க வகையற்ற தன்மையை அடைந்ததை எண்பிப்பதற்கு அல்லது வங்கி பொருத்தமானது எனக் கருதும் அத்தகைய வேறு காரணங்களுக்காக கடன் அட்டை வைத்திருப்பவர் உள்ளிட்ட எந்தவொரு திறத்தவரதும் பொறுப்பை வங்கி நிதானமாக பாதுகாப்பதனை இயலச் செய்யும் நோக்கத்திற்கு அமைய வங்கிக்கு ஏதேனும் இடைவரு கடப்பாடு எதுவுமின்றி, பெற்றுக்கொள்ளப்பட்ட ஏதாவது பணத்தொகை, மீட்கப்பட்ட அல்லது தேறுதலான பணத்தொகை அல்லது அட்டை வைத்திருப்பவரின் அட்டைக்கான வேறு ஏதாவது பாதுகாப்பினை அல்லது உத்தரவாதத்தினை, வங்கிக்கு செலுத்தப்பட வேண்டிய நிலுவைத் தொகைக்குப் பதிலாக முழுமையாக அல்லது பகுதியளவில் வங்கியால் வைத்திருக்கப்படலாம்.

22.3 கடன் அட்டையை வழங்கும் போது பாதுகாப்பு பிணையாக எமது கிளைகளிலுள்ள ஏதாவது ஒரு வைப்புக் கணக்கில் கடன் அட்டை வைத்திருப்பவர் நிதிகளை வைப்பீடு செய்யுமாறு வங்கி கோரலாம். இந்தக் கணக்கிலுள்ள வைப்புக்கு எதிராக கடன் அட்டை நிலுவைகளை எதிரீடு செய்வதற்காக பிடித்து வைப்பதற்கு வங்கிக்கு உரிமையுண்டு. இந்த நிதிகளை அணுகுவதற்கு கடன் அட்டை வைத்திருப்பவர் விரும்பினால், அதுகுறித்து அவர் வங்கிக்கு முன்னறிவித்தலை வழங்க வேண்டும். கடன் அட்டை வைத்திருப்பவரின் கடன் அட்டை தொடர்பான நடத்தைகளின் மீது வங்கியானது, தீர்மானம் ஒன்றை மேற்கொள்வதற்கு முழுமையான தற்றுணிபைக் கொண்டுள்ளது. பாதுகாப்புப் பிணையாக வைத்திருக்கக்கூடிய நிதிகளை விடுவிப்பதற்கு, அங்கீகாரம் கிடைத்து 3 வேலை நாட்கள் செல்லும்.

23. சட்ட நடவடிக்கைகள்

அட்டை வைத்திருப்பவர் ஏதேனும் காரணத்திற்காக இந்த உடன்படிக்கையின் நியதி நிபந்தனைகளுடன் இணங்கியொழுகத் தவறினால் இந்த உடன்படிக்கையை வங்கி முடிறுத்தலாம் என்பதுடன் இதன் கீழ் நிலுவையாகவுள்ள எல்லாத் தொகைகளையும் மீட்டுப் பெறுவதற்கான நடவடிக்கைளையும் மேற்கொள்ளலாம். வங்கிக்கு ஏற்படும் சட்டக் கட்டணங்கள் உட்பட அனைத்து கிரயங்கள், அறவீடுகள் மற்றும் செலவுகள் என்பனவற்றிற்கு அட்டை வைத்திருப்பவர் முழுமையான நட்டோத்தரவாத அடிப்படையில் பொறுப்புடையவராதல் வேண்டும்.

24. அறிவித்தல்கள்

24.1 அட்டை வைத்திருப்பவர் பெயரில், தொழிலில், வியாபாரத்தில் அல்லது முகவரியில் (அலுவலகம் அத்துடன்/ வதிவிடம்) அந்தந்த தொலைபேசி இலக்கங்கள் என்பவற்றில் ஏதேனும் மாற்றம் பற்றி உடனடியாக வங்கிக்கு எழுத்தில் அறிவித்தல் வேண்டும்.

24.2 அட்டை வைத்திருப்பவரின் கடைசியாக அறியப்பட்ட விலைப்பட்டியலிடும் அல்லது வேறு ஏதேனும் முகவரிக்கு நேரரிடியாக ஒப்படைக்கப்படுகின்ற அல்லது ஒப்படைத் தூதுவர் மூலம் அல்லது சாதாரண அஞ்சல் மூலம் அனுப்பப்படும் அனைத்து அட்டைகள், PIN, கணக்குக் கூற்று, கோரிக்கைகள், அனைத்தும் அல்லது இந்த நியதி நிபந்தனைகளின் கீழான வேறு எவையேனும் தொடர்பாடல்கள் கையால் ஒப்படைக்கப்படின் ஒப்படைத்தற் தினத்தன்று அல்லது ஒப்படைத் தூதுவர் மூலம் அல்லது அஞ்சல் மூலம் அனுப்பப்படின் அனுப்பப்பட்ட மூன்று வேலை நாட்களுக்குள் அட்டை வைத்திருப்பவருக்குச் சேர்ப்பிக்கப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

24.3 இந்த நியதி நிபந்தனைகளின் கீழ் முதனிலை அட்டை வைத்திருப்பவருக்கு அத்துடன்/அல்லது குறைநிரப்பு அட்டை வைத்திருப்பவருக்கு அனுப்பப்படும் அனைத்துத் தொடர்பாடல்களும் அவர்கள் இருவருக்கும் அனுப்பப்பட்ட தொடர்பாடல்களாகக் கருதப்படுதல் வேண்டும்.

24.4 வங்கியை அல்லது உற்பத்திப் பொருட்கள்/சேவைகள் பற்றிய அனைத்து சந்தைப்படுத்தும் தகவலையும் மின்னஞ்சல், SMS, தொலைநகல், அஞ்சல், தொலைபேசி முதலியவற்றின் ஊடாக பெறுவதற்கு அட்டை வைத்திருப்பவர் வங்கிக்கு அதிகாரமளிக்கின்றார்.

25. பொது

25.1 அட்டை வைத்திருப்பவரின் அறிவுறுத்துல்கள் மீது நல்லெண்ணத்துடன் செயற்படுவதற்கு வங்கி பொறுப்புடையதாக மாட்டாது.

25.2 அத்தகைய அறிவுறுத்துதல் எதனையும் வங்கி அதன் தற்றுணிபின் பேரில் பதிவு செய்வதற்கும் அத்தகைய பதிவுகளை நீதிமன்றமொன்றில் அல்லது வழக்கு நடவடிக்கைகளில் சான்றாகப் பயன்படுத்துவதற்கும் அட்டை வைத்திருப்பவர் வங்கிக்கு அதிகாரமளிக்கிறார்.

25.3 இந்த உடன்படிக்கையின் கீழ் அட்டை வைத்திருப்பவரிடமிருந்து வங்கிக்கு வருமதியாகவுள்ள எல்லாப் பணத்தொகைகளையும் சேகரிப்பதற்கு முகவர் ஒருவரை நியமிப்பதற்கு வங்கி உரித்துடையதாதல் வேண்டும்.

25.4 இந்த உடன்படிக்கையின் கீழான அதன் உரிமைகளை அல்லது கடப்பாடுகளை முழுமையாக அல்லது பகுதியளவில் அட்டை வைத்திருப்பவருக்கு அறிவித்து அல்லது அறிவிக்காமலும் அவரின் சம்மதத்தைப் பெறாமலும் ஏதேனும் நேரத்தில் சாட்டுதல் செய்வதற்கு வங்கி உரித்துடையதாதல் வேண்டும்.

25.5 வங்கியால் காலத்திற்குக் காலம் கோரப்படும் அத்தகைய மேலதிக ஆவணங்களில் கையொப்பமிடுவதனை அட்டை வைத்திருப்பவர் பொறுப்பேற்கின்றார்.

25.6 இதன் கண் ஏற்பாடு செய்யப்படும் உரிமைகளும் நிவாரணங்களும் திரண்டவையாகும் என்பதுடன் சட்டத்தால் ஏற்பாடு செய்யப்படும் உரிமைகளுக்கும் நிவாரணங்களுக்கும் பிரத்தியேகமானவையுமல்ல.

25.7 இதன் கண்ணுள்ள நியதி நிபந்தனைகள் கடன் அட்டை வைத்திருப்பவர் பிணிக்கின்றதாதல் வேண்டும்.

25.8 இதன் கண்ணுள்ள நியதி நிபந்தனைகள் அட்டை வைத்திருப்பவர் மீது பிணிக்கின்றதாதல் வேண்டும் என்பதுடன் அவர் இதன் கண்ணுள்ள அவரது கடப்பாடுகளை வேறு எவருக்கும் சாட்டுதல் செய்தலுமாகாது.

25.9 வங்கி இந்த நியதி நிபந்தனைகளிலுள்ள எதனையும் அல்லது அட்டை வைத்திருப்பவரின் தவணை தவறுகை அல்லது மீறல் எதனையும் நிபந்தனை இன்றியோ அல்லது வேறு வகையிலோ ஏதேனும் நேரத்தில் விட்டுவிடலாம். ஆயினும் அத்தகைய விட்டுவிடுகை வங்கியால் எழுத்து மூலம் வழங்கப்படுதல் வேண்டும். அத்துடன் மேலே கூறப்பட்டவாறு நிபந்தனை அல்லது இந்த நியதி நிபந்தனைகளின் ஏதேனும் தவணை தவறுகையை அல்லது மீறுகையை மன்னித்தல் வங்கியின் உரிமைகளையும் தத்துவங்களையும் விட்டு விடுவதாக செயற்படமாட்டாது. அத்துடன் விட்டு விடுகை எதுவும் வங்கிக்கு எழுத்தில் தெரிவிக்கப்பட்டாலன்றி வங்கியால் செய்யப்பட்ட அல்லது செய்யப்படாத எந்தச் செயலிலிருந்தும் அனுமானிக்கப்படுதலோ அல்லது அதனால் உட்கிடையாக உணர்த்தப்படுதலோ ஆகாது. விட்டுவிடுகை எதுவும் அது எந்த விடயத்தைத் தொடர்புறுத்துகின்றதோ அந்த விடயத்தை மாத்திரமே விட்டு விடுவதாக செயற்படும் என்பதுடன் அது தொடர்புறுத்தும் குறிப்பிட்ட வியடத்தின் விட்டுவிடுகையாக அல்லது விடுவிப்பாக செயற்படமாட்டாது. அத்துடன் இந்த நியதி நிபந்தனைகள் எவற்றினதும் விட்டுவிடுகை அல்லது விடுவிப்பொன்றாக செயற்படமாட்டாது.

25.10 அந்தந்த வணிகர்களால் வழங்கப்படும் விசேட கழிவுகள்/சலுகைகள் தொடர்பில் வங்கி எந்தவித நியதி உத்தரவாதத்தையும் வழங்கவோ இச்சலுகைகள் தொடர்பில் தரப்பட்டுள்ள அல்லது அதன் விநியோகம், தரம், வடிவமைப்பு, விவரக்கூற்றுகள் என்பன தொடர்பில் அல்லது வேறு வகையில் எந்தவொரு கருத்துரையையும் வழங்கவோமாட்டாது. அத்துடன், இந்தத் தயாரிப்புக்கள்/சேவைகள் அவை கிடைக்கக் கூடிய நிலைமையைப் பொறுத்தது என்பதுடன், முதலில் வருவோருக்கு முதலில் என்ற அடிப்படையில் சேவை வழங்கப்படும்.

25.11 அந்தந்த வணிகர்களால் வழங்கப்படும் விசேட கழிவுகள்/சலுகைகள் தொடர்பில் வங்கி பொறுப்பாளியாக்கப்பட-மாட்டாது.

25.12 வங்கியின் அஞ்சல்கள் திருப்பியனுப்பப்படும் பட்சத்திலும் அட்டை வைத்திருப்பவருடன் தொடர்புகொள்ள இயலாத பட்சத்திலும் அட்டை வைத்திருப்பவரின் கணக்குக் கூற்றுக்களை அத்துடன்/அல்லது கடிதத் தொடர்புகளை விண்ண ப்பப்படிவத்தில் குறித்துரைக்கப்பட்ட வேறொரு முகவரிக்கு திருப்பி அனுப்பும் உரிமை வங்கிக்குண்டு.

25.13 ஏதேனும் கொடுக்கல் வாங்கல்(கள்) தொடர்பாக அட்டை வைத்திருப்பவர் பிணங்கினால் அத்தகைய பிணக்குகளை வங்கி புலனாய்வு செய்யும். ஆயினும் அட்டை வைத்திருப்பவர் சட்ட நடவடிக்கையைத் தொடர விரும்பாவிடில் அல்லது புலனாய்வின்போது புலனாய்வில் துணை புரிவதற்கென வங்கிக்கு வருகை தராவிடில் அல்லது CCTV

மற்றும் வேறு சான்றுகளை அனுசரிக்க விரும்பாவிடில் அல்லது வணிகரின் விற்பனை முனையங்களுக்கு அல்லது ATM களுக்கு வருகை தர விரும்பாவிடில் பிணக்கிற்குட்பட்ட எல்லா கொடுக்கல் வாங்கல்களுக்கும் அட்டை வைத்திருப்பவர் பொறுப்பாளியாதல் வேண்டும்.

26. நியதிகள் வேறுபடுதல்

26.1 இந்த உடன்படிக்கையின் நியதி நிபந்தனைகளை வங்கிக் காலத்திற்குக் காலம் மாற்றலாம். நியதிச்சட்டத்தின் தேவைப்பாட்டிற்கு அமைய அத்தகைய ஏதேனும் மாற்றம் பற்றிய அறிவித்தல்கள் வங்கியால் எழுத்து மூலம் அல்லது அதனைப்பற்றிய வெளியீட்டின் மூலம் அட்டை வைத்திருப்பவருக்கு வழங்கப்படும். அத்தயை மாற்றங்கள் செலுத்தப்படாத நிதி அறவீடுகள், கட்டணங்கள், முற்பணக் கொடுப்பனவுகள், செலவுகள் மற்றும் கடன் அட்டைக் கொடுக்கல் வாங்கல்கள் அனைத்துக்கும் ஏற்புடையனவாகும்.

26.2 இந்த உடன்படிக்கையின் நியதி நிபந்தனைகளில் ஏற்படும் அத்தகைய மாற்றம் பயனுறும் திகதிக்கு பின்னர் அட்டையை வைத்திருத்தலானது அல்லது பாவித்தலானது அட்டை வைத்திருப்பவரால் மறுப்பு எதுவுமின்றி அத்தகைய மாற்றங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டதாகவே கருதப்படும். உத்தேச மாற்றத்தை அட்டை வைத்திருப்பவர் ஏற்றுக்கொள்ளாத பட்சததில் பயனுறும் திகதிக்கு முன்னர் எழுத்துமூலமான முன்னறிவித்தலைக் கொடுத்து கடன் அட்டையின் பாவனையை முடிவுறுத்துதல் வேண்டும். அதிலிருந்து வாசகம் 17 (முடிவுறுத்துதல்) நடைமுறையிலிருத்தல் வேண்டும்.

27. உடன்படிக்கையின் பயனுறு தன்மை

27.1 இந்த உடன்படிக்கையின் முடிவுறுத்தல் எவ்வாறிருப்பினும் இதில் அடங்கியுள்ள அனைத்து ஏற்பாடுகளும் அட்டை வைத்திருப்பவரினதும் ஏதேனும் குறைநிரப்பு/மேலதிக அட்டை வைத்திருப்பவரினதும் அட்டை கொடுக்கல் வாங்கல் தொடர்பிலும் அதன் கீழ் உறப்பட்ட அட்டை வைத்திருப்பவரினதும் ஏதேனும் குறைநிரப்பு/மேலதிக அட்டை வைத்திருப்பவரினதும் பொறுப்புகளுக்காக அட்டை வைத்திருப்பவருக்கும் குறைநிரப்பு அட்டை வைத்திருப்பவருக்கும் எதிராக தொடர்ந்து முழு வலுவுடனும் பயனுறுதியுடனும் இருக்கும்.

27.2 இந்த நியதி நிபந்தனைகளின் ஒவ்வொன்றும் தனித்தனியானதாகவும் ஒன்றிலிருந்து ஒன்றைப் பிரித்துக் காட்டக்கூடியதாகவுமிருக்கும். ஏதேனும் நேரத்தில் இந்த நியதி நிபந்தனைகளுள் ஏதாவது ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவை செல்லுபடியற்றதாக, சட்டவிரோதமானதாக அல்லது வலுவுக்கிடப்பட முடியாததாக இருக்குமாயின் அல்லது அமையுமாயின் எஞ்சியுள்ள ஏற்பாடுகள் அதனால் எதுவிதத்திலும் பாதிக்கப்படுதலோ வலிமை குறைதலோ ஆகாது.

28. அட்டை உறுப்பினர் வெளிநாடு செல்லல்

வேறு நாட்டிற்குச் செல்லும் அத்துடன்/அல்லது நிரந்தரத் தொழிலுக்காக வெளிநாடு செல்லும் அல்லது அந்நேரத்தில் வலுவிலுள்ள செலாவணிக் கட்டுப்பாட்டு ஒழுங்குவிதிகளின் வரைவிலக்கணத்தின்படி "வதிவற்றவராக" கருதப்படும் அட்டை வைத்திருக்கும் ஒருவர் வங்கிக்கு எழுத்தில் அறிவித்தல் வேண்டும் என்பதுடன் விலைப்பட்டியலிடப்பட்டவையும் விலைப்பட்டியலிடப்படாதவையுமான எல்லா அறவீடுகளையும் செலுத்தித் தீர்த்தல் வேண்டும். அத்துடன் அட்டை வைத்தருப்பவர் புறப்பட்டுச் செல்வதற்கு முப்பது (30) நாட்களுக்கு முன்னர் அட்டையை ஒப்படைத்தல் வேண்டும். அட்டையினதும் குறைநிரப்பு அட்டையினதும் பாவனை முடிவுறுத்தப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன் வாசகம் 17 ஏற்புடையதாதலும் வேண்டும்.

29. அந்நிய நாட்டினர்களுக்கான அட்டைகள்

இலங்கை மத்திய வங்கியால் வழங்கப்பட்ட நடைமுறையிலுள்ள ஒழுங்கு விதிகளுக்கமைய அந்நிய நாட்டினர் ஒருவருக்கு அட்டையொன்று வழங்கப்படலாம். அவர் நிரந்தரமாக நாட்டை விட்டுச்செல்வாராயின் ஒரு மாதத்திற்கு முன்னரும் அத்துடன்/அல்லது அவரது வதிவிட வீசா முடிவுறுவதற்கு ஒரு மாதத்திற்கு முன்னரும் வங்கிக்கு எழுத்தில் அறிவித்தல் வேண்டும். மேற்கூறப்பட்ட எவையேனும் சம்பவங்கள் நிகழ்வதற்கு முன்னர் அவர் விலைப்பட்டியலிடப்பட்டவையும் விலைப்பட்டியலிடப்படாதவையுமான எல்லா அறவீடுகளையும் செலுத்தித் தீர்த்தலும் அட்டையை/அட்டைகளை வங்கிக்கு ஒப்படைத்தலும் வேண்டும்.

30. அந்நிய செலாவணி கொடுக்கல் வாங்கல்களின் மாற்றத்தின் மீதான அறவீடு

27.1 இலங்கை ரூபாய் அல்லாத வேறு நாணயங்களில் மேற்கொள்ளப்படும் கொடுக்கல் வாங்கல்கள் அவ்வாறு கொடுக்கல் வாங்கல் இடம்பெற்ற தினத்தன்று அட்டை நிறுவனத்தால் கடைப்பிடிக்கப்படும் செலாவணி வீதப்படி தீர்மானிக்கப்பட்ட செலாவணி வீதமொன்றில் இலங்கை ரூபாவாக மாற்றப்பட்ட பின்னர் அட்டை கணக்கில் பற்று வைக்கப்படும். அத்துடன் மேலதிகமாக இயைபான அட்டை நிறுவனத்தால் வங்கிக்கு அறவிடப்படும் ஏதேனும் கொடுக்கல் வாங்கல் கட்டணமும் அறவிடப்படும்.

31. ஆளுகை செய்யும் சட்டம்

31.1 நியதி நிபந்தனைகள் இலங்கைச் சட்டங்களால் ஆளப்படுவதுடன், அதற்கிணங்க பொருள் கொள்ளப்படுதலும் வேண்டும். அத்துடன் இலங்கையிலுள்ள நீதிமன்றங்களின் நியாயாதிக்கத்திற்குப் பிரத்தியேகமாக அட்டை வைத்திருப்பவர் இத்தால்

கட்டுப்பட்டவராகின்றார். ஆயினும் அத்தகைய கட்டுப்படுதலானது அட்டை வைத்திருப்பவருக்கெதிராக வேறு ஏதேனும் நியாயாதிக்கத்தில் வழக்கு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான வங்கியின் உரிமையைப் பாதித்தலாகாது.

31.2 சட்டத்தால், அரசாங்கத்தின் ஒழுங்கு விதிகளால் அல்லது இலங்கை மத்திய வங்கியினால் விடுக்கப்படும் பணிப்புரைகளால் திருத்தங்கள் மேற்கொள்வது அவசியப்படுத்தப்பட்டால், இந்த நியதி நிபந்தனைகள் தானாக திருத்தப்படும். உங்களது அட்டையானது சட்டபூர்வமான மற்றும் செல்லுபடியான நோக்கங்களுக்கு மாத்திரமே பயன்படுத்தப்பட வேண்டும். நீங்கள் அட்டையை அல்லது அட்டைக் கணக்கை வேறு நோக்கங்களுக்குப் பாவித்தால் அல்லது பாவிப்பதற்கு மூன்றாம் திறத்தவர் ஒருவரை நீங்கள் அனுமதிக்கும் பட்சத்தில், அத்தகைய பாவனைக்கு நீங்கள் பொறுப்புடையவராகின்றீர்கள் என்பதுடன், அத்தகைய பாவனையின் விளைவாக வங்கிக்கு அல்லது இயைபான அட்டை ஒழுங்கமைப்பதற்கு ஏற்படும் செலவுகளை மற்றும்/அல்லது தொகையை அத்திறத்தவர்களுக்கு அல்லது மூன்று திறத்தவர்களில் ஒரு திறத்தவருக்கு செலவீடு செய்வதற்கு நீங்கள் பொறுப்புடையவராதல் வேண்டும். அத்தகயை நிலைமையில் அத்தகைய கொடுப்பனவை உடனடியாக இடைநிறுத்துவதற்கும் இவ்விடயத்தை செலாவணிக் கட்டுப்பாட்டதிகாரியின் கவனத்திற்குக் கொண்டுவருவதற்குமான உரிமையை வங்கி கொண்டுள்ளது.

31.3 உங்கள் அட்டையில் அதிகாரமளிக்கப்படாத அந்நியச் செலாவணி கொடுக்கல் வாங்கல் இடம்பெறுவதாக வங்கி சந்தேகிப்பதற்கு நியாயமான காரணம் இருப்பின் அந்தக் கடன் அட்டை மீது பெற்றுக்கொள்ளக்கூடிய அந்நிய செலாவணி வசதியை உடனடியாக இடைநிறுத்துவதற்கும் அதனை செலாவணிக் கட்டுப்பாட்டதிகாரிக்கு அறிவிப்பதற்குமான உரிமையை வங்கி கொண்டுள்ளது. அத்துடன், அட்டை வைத்திருப்பவர் அட்டையைப் பாவித்து மேற்கொள்ளும் அந்நியச் செலாவணி கொடுக்கல் வாங்கல்கள் பற்றிய தகவல்களைப் பெற்றுக்கொள்ளும் உரிமையும் வங்கிக்கு உண்டு.

31.4 கடன் அட்டை வைத்திருப்பவர் இலங்கையை விட்டு நிரந்தரமாக, தொழில் அல்லது வெளிநாட்டிலுள்ள நிரந்தர வதிவிடம் என்பவற்றுக்கு செல்வதாக இருந்தால், NRFC, RFC, RNNFC கணக்குகள் மற்றும் கடலுக்குப்பாலுள்ள கணக்குகள் என்பவற்றில் வைப்பிலிடப்பட்டிருக்கக்கூடிய நிதியை, கடன் அட்டை மீது பெற்றுக்கொள்ளப்பட்ட அந்நிய செலாவணியை தீர்வை செய்வதற்கு பயன்படுத்துவதற்காக கடன் அட்டை வழங்கப்பட்டிருந்தாலன்றி, அது அவரால் வங்கியிடம் ஒப்படைக்கப்பட வேண்டும்.

31.5 இத்துடன் இணைக்கப்பட்டுள்ள இலங்கைச் சனநாயக சோஷலிசக் குடியரசின் 2005 செப்டம்பர் 19ஆம் திகதி திங்கட்கிழமையன்று வெளியான இல. 1411/5 கொண்ட அதிவிசேட வர்த்தமானி இந்த நியதி நிபந்தனைகளின் உள்ளார்ந்த பாகமாக அமைகின்றது என்பதுடன் அட்டை மீது அந்நியச் செலாவணி கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்ளும்போது வாசித்து, விளங்கிக்கொள்ளுதலும் பிரயோகித்தலும் வேண்டும்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானி
அதிவிசேடம் - இல.1411/5 திங்கட்கிழமை, செப்டெம்பர் 19, 2005
பகுதி 1: பிரிவு (1) - பொது - இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள்

(இலங்கைச் சட்டவாக்கத்தின் 423ஆம் அத்தியாயமான) செலாவணி கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழான அறிவித்தல்

1. (இலங்கைச் சட்டவாக்கத்தின் 423ஆம் அத்தியாயமான) செலாவணி கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 7ஆம் 8ஆம் பிரிவின் நோக்கத்திற்கு இலங்கையிலிருக்கும் அல்லது இலங்கையில் வதியும் ஆளொருவர் இலங்கைக்கு வெளியே வதியும் ஆளொருவருக்கு அவரது இலத்திரனியல் நிதிக் கைமாற்றல் அட்டையின் மீது (EFTC) வெளிநாட்டுச் செலாவணியில் கொடுப்பனவு செய்வதற்கு பின்வரும் நியதி நிபந்தனைகளுக்கமைய இத்தால் அனுமதி வழங்கப்படுகின்றது.
2. வெளிநாட்டில் வதியும் ஆளொருவருக்கு அல்லது அமைப்பிற்கு EFTC மூலம் பின்வரும் நோக்கங்களுக்கு மாத்திரமே கொடுப்பனவொன்று செய்யப்படலாம்.
   அ. பயணம், தங்குமிடவசதி, மருத்துவம், வாழ்க்கை மற்றும் கல்விச் செலவுகள் உட்பட தனிப்பட்ட இயல்பினவான சேவைகளுக்காகவே கடன் அட்டை வைத்திருப்பவரால் வெளிநாட்டில் கொடுப்பனவு செய்யப்படவேண்டும்.
   ஆ. வெளிநாட்டில் தனிப்பட்ட பாவனைக்கு பொருட்களின் கொள்வனவுக்கான கொடுப்பனவு.
   இ. தனிப்பட்ட பாவனைக்காக வெளிநாட்டில் இருந்து இலங்கைக்கு பொருட்களை இறக்குமதி செய்வதற்கான கொடுப்பனவு. அனுப்புப் பொருள் ஒன்றுக்கு 3000 அமெரிக்க டொலர் (c.i.f) அல்லது அதற்கு சமமான வெளிநாட்டு நாணயத்தில் என்பதற்கமைய.
   ஈ. வெளிநாட்டு உயர்தொழில் குழுமம் அல்லது கல்விசார் நிறுவனமொன்றிற்கு செலுத்தப்பட வேண்டிய தனிப்பட்ட இயல்பினதான பதிவுக் கட்டணங்கள், பரீட்சைக் கட்டணங்கள், ஆண்டு ஒப்பப்பணக் கட்டணங்கள்.
   உ. தனிப்பட்ட இயல்பினதான பிரயாண மற்றும் சுகாதாரக் காப்புறுதிக்காக மட்டும் காப்புறுதிக் கட்டுப்பணம் தொடர்பில் செய்யப்படும் கொடுப்பனவுகள்
   ஊ. பந்தி 2(அ) என்பதன் நோக்கெல்லைக்கு வெளியே இடம்பெறும் ஏதேனும் கொடுக்கல் வாங்கல்களுக்காக EFTC மீது வெளிநாட்டு நாணயத்திலான ஏதேனும் கொடுப்பனவுக்கு அத்தகைய கொடுப்பனவு வதிவற்ற நாட்டினத்தவர் அல்லாத வெளிநாட்டு நாணயக் கணக்கின் (NRFC), வதிவுள்ள வெளிநாட்டு நாணயக் கணக்கின் (RFC), வதிவுள்ள நாட்டவரல்லாத வெளிநாட்டு நாணயக் கணக்கின் (RNNFC) அல்லது உரிமம் பெற்ற வர்த்தக வங்கியின் கடல்கடந்த வங்கித்தொழிற் கூறு ஒன்றில் கடல் கடந்த கணக்கொன்றின் வரவிலிருக்கும் நிதியிலிருந்து செய்யப்படும் அனுமதிக்கப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பில் செய்யப்பட்டாலன்றி செலாவணிக் கட்டுப்பாட்டதிகாரியின் எழுத்திலான முன் அனுமதி தேவைப்படுதல் வேண்டும்.
3. இந்த வர்த்தமானி அறிவித்தலின் நோக்கத்திற்காக சந்தர்ப்பம் வேறு வகையில் தேவைப்படுத்தினாலன்றி இலத்திரனியல் நிதி கைமாற்றல் அட்டைகள் (EFTC) என்பது, வரவில், பற்றில் அல்லது வேறு ஏதேனும் வடிவில் பெறுமதியைப் கைமாற்றுவதற்கென பாவனையாளருக்கு வசதியளிக்கும் ஒரு அட்டை அல்லது சாதனம் எனப் பொருள்படுவதுடன் கிறடிட் அட்டைகள், டெபிட் அட்டைகள் அல்லது தேக்கிவைக்கப்பட்ட பெறுமதி அட்டைகள் என்பவற்றையும் உள்ளடக்கும்.
   அத்துடன்
   "தனிப்பட்ட பாவனை" என்பது, அட்டை வைத்திருப்பவர், அவரது வாழ்க்கைத்துணை மற்றும் பிள்ளைகள், பெற்றோர்கள் என்போரின் பாவனைக்கு எனப் பொருள்படுவதுடன் ஏதேனும் வர்த்தக நோக்கத்தை உள்ளடக்கவும் மாட்டாது.